Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
உள்நாடு வெளிநாடுகளுக்கான சகல விதமான
துரித தபால் / பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency Post Office
303, K.K.S ROAD, JAFFNA T.P- 021-222 2670,
FAX-222 3214, email-del-smskr@eureka.lk

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 15 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷஃபான் 05 (03.10.2003) வெள்ளிக்கிழமை இதழ்:03

# இறுதி வரைபை தயாரிக்கவே அயர்லாந்துக்குச் செல்கிறோம்

## தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

இடைக்கால நிர்வாகம் தொடர்பான இறுதி வரைபை தயாரிப்பதற்காகவே அயர்லாந்து செல்கின்றோம் என, தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கிளிநொச்சியிலிருந்து புறப்படும் முன்னர் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த தமிழ் நிபுணர்களினதும், ஐரோப்பிய, தென்னாபிரிக்கா நாட்டின் அரசியல், சட்ட நிபுணர்களினதும் ஆலோசனைகளையும், கருத்துக்களையும் அயர்லாந்து நாட்டின் அனுபவங்களையும் பகிர்ந்துகொள்ளவுள்ளோம்.

நேற்று கிளிநொச்சி மத்திய விளையாட்டரங்கிலிருந்து கொழும்பு புறப்படுவதற்கு முன்னர் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய பேட்டியில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் இவ்வாறு தெரிவித்தார்.

இடைக்கால வரைபு தொடர்பான மாநாடு இரண்டு கட்டங்களாக நடைபெறும் எனவும் அத்துடன் பொருளாதார திட்டமிடல் அபிவிருத்தி ஆலோசனைகளை பெறுதல் தொடர்பான மாநாடு ஒன்றும் நடைபெறவுள்ளதாகவும், இதில் 10 இற்கும் 15 இற்கும் இடைப்பட்ட நிபுணர்கள் பங்குகொள்வார்கள் என்றும் சு.ப.தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டார்.

நேற்று, முற்பகல் 10.30 மணிக்கு சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான விசேட உலங்கு வானூர்தி மூலம் (10 ஆம் பக்கம் பார்க்க)



அயர்லாந்து செல்லப் புறப்பட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், மூத்த தளபதி கேணல் கருணா, ஆகியோரைப் படத்தில் காணலாம்.

### கட்சி உறுப்பினர்களுடன் ஜனாதிபதி ஆராய்வு

(கொழும்பு)

ஜே.வி.பியுடன் கூட்டணி அமைக்கும் நோக்கில் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க வேண்டுமா என்பது குறித்து - சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட, ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து ஜனாதிபதி கருத்துக்களைக் கேட்டறிந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமது யோசனைகளைக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவிடம் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி கட்சி அங்கத்தவர்களிடம் தெரி (10 ஆம் பக்கம் பார்க்க)

### பிரதமருக்கு அழைப்பு

(கொழும்பு)

10 ஆவது சர்வதேச இஸ்லாமிய மாநாட்டில் கலந்துகொள்வதற்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மலேசியப் பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த மகாநாடு ஒக்டோபர் 16 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை மலேசியாவில் நடைபெறவுள்ளது.

## இடைக்கால திட்ட வரைபை குழப்ப

# எதிர்க் கட்சிகள் பாரிய திட்டம்; அமைச்சர் பீரிஸ் குற்றச்சாட்டு!

(கொழும்பு)

**இந்தியாவை பயன்படுத்தி சமாதான முயற்சிகளை குழப்புவதற்கு எதிர்க் கட்சிகள் எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்ததையடுத்து, இடைக்கால திட்டவரைபிற்கு எதிராக பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளில் எதிர்க்கட்சிகள் ஈடுபடவுள்ளதாக - அமைச்சரவை பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் குற்றஞ்சாட்டினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,**

எதிர்க்கட்சிகள் இந்தியாவின் உணர்ச்சிகளை கிளறி குழப்பங்களை ஏற்படுத்துவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் பரிதாபகரமான தோல்வியை தளுவியுள்ளது.

இதையடுத்து, எதிர்வரும் வாரங்களில் புலிகளால் சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்கால திட்டவரைபிற்கு எதிராக எதிர்க்கட்சிகள் பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் குற்றஞ்சாட்டினார்.

நேற்று அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பின்போதே, அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இதனைத் தெரிவித்தார். அத்துடன் -

குழப்பவாத சக்திகள் மூலம், நெருக்கடிகளை ஏற்படுத்த முனைந்த (10 ஆம் பக்கம் பார்க்க)

### வெள்ளப்பெருக்கால் பத்து பேர் மரணம்

(கொழும்பு)

தென்பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வெள்ளப் பெருக்கு, மண்சரிவினால் 10 பேர் கொல்லப்பட்டுள்ளனர்

கொழும்பிலிருந்து 50 மைல் தொலைவிலுள்ள எலிப்பிட்டிய என்ற கிராமத்தில் ஏற்பட்ட மண்சரிவினால் இரண்டு பேர் கொள்ளப்பட்டார். அத்துடன் கெழும்பிலிருந்து 68 மைல் தூரத்திலுள்ள யக்கலமுல என்ற (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



திட்டம் போடுறதும் தடக்கி விழுறதும் இவைக்கு ஒண்டும் புதுசு இல்லையே.

# சமாதான முயற்சிகள் குறித்து எதிராக சிந்திக்க தேவையில்லை

## உதவி வழங்கும் அமைப்புக்கள் தெரிவிப்பு

சமாதான முயற்சிகள் குறித்து எவரும் எதிரான நோக்குடன் சிந்திக்கத் தேவையில்லையென இலங்கைக்கு உதவிவழங்கும் உலக வங்கி தலைமையிலான அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, இலங்கைக்கான உதவிகளை தொடர்ந்து அதிகளவில் வழங்கவும், இந்த அமைப்புகள் உறுதியளித்துள்ளன.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய வங்கி ஆகிய மூன்று நிறுவனத்திற்கும் முதற்தடவையாக நேற்றுமுன்தினமும், நேற்றும் கூட்டமொன்றை நடத்தினர்.

அந்தக் கூட்டம் தொடர்பாக நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

# திருமலையில் ராணுவ உளவாளி நேற்று மாலை வெட்டிக் கொலை!

(திருகோணமலை)

இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் திருகோணமலைப் பகுதியில் வைத்து நேற்றுப் பிற்பகல் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

திருகோணமலையிலுள்ள உவர்மலைத் தூர்க்கையம்மன் கோயிலுக்கு அண்மையிலுள்ள திலாண்டன் இராணுவ முகாமில் கடமையாற்றும் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த விக்கினேஸ்வரன் (வயது 25) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

இவர் 22 ஆவது படைப்பிரிவில் இருந்து தனது வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, இனந் தெரியாதவர்களால், கூரிய ஆயுதங்களாலும், இரும்புக் கம்பிகளாலும் கடுமையாகத் தாக்கியதில் இவர் கொல்லப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர், ஏற்கனவே விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து விலகி, இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவில் இணைந்தவர். முன்பு உவர் மத்திய வீதியில், ஆறு மாதத்துக்கு முன்னர், தாக்குதலுக்கு உள்ளாகித் (10 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவு வழங்கும்

## ரிச்சர்ட் ஆர்மிடேஜ் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கும், பொருளாதார முன்னேற்றத்துக்கும் அமெரிக்கா தனது பூரண ஆதரவினைத் தொடர்ந்தும் வழங்கும்.

இவ்வாறு, ஆர்மிடேஜ்சைச் சந்தித்த இலங்கையின் - விஞ்ஞான தொழில்நுட்ப பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவிடம் அமெரிக்க பிரதி ராஜாங்க அமைச்சர் ரிச்சேட் ஆர்மிடேஜ் தெரிவித்தார்.

அமெரிக்காவின், நியூயோர்க் நகரில் நடைபெற்ற ஐ.நா.சபையின் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற மிலிந்த மொறகொட அந்தக் கூட்டம் முடிந்த பின்னர் அமெரிக்க உயரதிகாரிகளையும், வர்த்தகப் பிரமுகர்களையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

அமெரிக்க தேசிய பாதுகாப்பு உதவி ஆலோசகர் ஸ்ரீவன் காட்லீயை (10 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் இன்று

# யுனிசெவ் நிறுவனத்தின் ஆதரவுடன் இடைத்தங்கல் முகாம் திறக்கப்படுகிறது!

(கிளிநொச்சி)

ஐக்கிய நாடுகள் அமைப்பின் அங்கமான யுனிசெப்பினால் கிளிநொச்சியில் இன்று இடைத்தங்கல் முகாம் ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

போராட்டத்தில் இணையச்சென்ற சிறுவர்களை, இந்த இடைத்தங்கல் முகாமில் தங்கவைத்து, பராமரிப்பதுடன், அவர்களது நலன்களைப் பேணுவதுடன் அவர்களை பெற்றோரிடம் ஒப்படைப்பதே இந்த இடைத்தங்கல் முகாமின் நோக்கமாகும்.

இந்த இடைத்தங்கல் முகாமில் விடுதலைப் புலிகள் 50 சிறுவர்களை ஒப்படைக்கவுள்ளனர். இன்று முறையாகத் தொடங்கப்படவிருக்கும் புனர்வாழ்வுத் திட்டத்தில் இந்த 50 சிறுவர்களும் (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291



எக்ஸ்போஎயார்
வான் வெளியில்

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சினால் யாழ் மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் அரிசி (தீட்டல் பச்சை) வழங்கலுக்கான கேள்வி கோரல்

01. யாழ் மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2003, ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான தீட்டல் பச்சை அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து கொள்வனவு செய்து கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கென கீழே தரப்பட்டுள்ள தொகை தீட்டல் பச்சை அரிசியை நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து கோரப்படுகின்றன. ஒவ்வொரு பல நோ. கூ. சங்கத்திற்கும் வழங்கீடு செய்யப்படவேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. இவைகளில் அளவு மாற்றங்கள் அந்தந்த மாதங்களில் அறிவிக்கப்படும்.

| இல | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | 2003 ஒக்டோபர் (MT) | 2003 நவம்பர் (MT) | 2003 டிசம்பர் (MT) |
| 01 | சாவகச்சேரி | 56 | 56 | 56 |
| 02 | கைதடி | 27 | 27 | 27 |
| 03 | கொடிகாமம் | 50 | 50 | 50 |
| 04 | உடுப்பிட்டி | 12 | 12 | 12 |
| 05 | கட்டைவேலி நெல்லியடி | 17 | 17 | 17 |
| 06 | பருத்தித்துறை | 45 | 45 | 45 |
| 07 | புலோலி | 10 | 10 | 10 |
| 08 | மருதங்கேணி | 31 | 31 | 31 |
| 09 | யாழ்ப்பாணம் | 123 | 123 | 123 |
| 10 | நல்லூர் | 64 | 64 | 64 |
| 11 | அச்சுவேலி | 57 | 57 | 57 |
| 12 | நீர்வேலி | 55 | 55 | 55 |
| 13 | மானிப்பாய் | 48 | 48 | 48 |
| 14 | பண்டத்தரிப்பு | 36 | 36 | 36 |
| 15 | அளவெட்டி மல்லாகம் | 26 | 26 | 26 |
| 16 | தெல்லிப்பளை | 55 | 55 | 55 |
| 17 | சங்கானை | 72 | 72 | 72 |
| 18 | சுன்னாகம் | 73 | 73 | 73 |
| 19 | புங்குடுதீவு நயினாதீவு | 16 | 16 | 16 |
| 20 | வேலணை | 19 | 19 | 19 |
| 21 | ஊர்காவற்றுறை | 26 | 26 | 26 |
| 22 | காரைநகர் | 21 | 21 | 21 |
| 23 | தீவகம் | 4 | 4 | 4 |
| 24 | நெடுந்தீவு | 11 | 11 | 11 |
| | மொத்தம் | 954 | 954 | 954 |

02) கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ. சங்கங்கள் மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/= இனை யாழ் மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி, கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2003.10.03 ஆம் திகதி தொடக்கம் 2003.10.16 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ. சங்கங்களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

03) மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/= ஐ அந்தந்த மாவட்ட செயலகங்களில் செலுத்தி, அரசாங்க அதிபர்களிடம் இருந்து கேள்விப்படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

04) கேள்வி கோரப்படவுள்ள அரிசி தீட்டல் பச்சை அரிசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

05) பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரி இடப்பட்ட நீளத் தபால் உறையில் நேரடியாகவோ/ தபால் மூலமாகவோ யாழ் செயலக மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2003.10.17 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்துமூலமான அங்கீகாரம்பெற்ற பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.

06) கேள்விப்பத்திரத்தின் தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் "அரிசி வழங்குவதற்கான கேள்வி" என எழுதப்படவேண்டும்.

07) கேள்விகாரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களில் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கும், அச் சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

08) ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயல்படுத்தல் முறிக்காக - Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

09) கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை - மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல்கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணங் கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

**செ.பத்மநாதன்,**
**தலைவர் / அரச அதிபர்,**
**மாவட்ட கேள்விச் சபை / மாவட்ட செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**
**2003.10.02**

(சி -1633)

## புலிகளை பேச்சில் ஈடுபடுத்த

# கனடாவின் உதவியை நாடியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு!



(வோஷிங்ரன்)

விடுதலைப் புலிகளை மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுத்துவதற்கு - கனேடிய அரசின் உதவியை நாடியிருப்பதாக, வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னான்டோ தெரிவித்தார்.


விடுதலைப்புலிகள் அமைப்புடன் தமக்கிருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி, அவர்களை மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்து வர உதவுமாறு, கனேடிய வெளிவிவகார அமைச்சர் பில் கிரஹாமிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாக, அவர் தெரிவிததார்.

தற்போது கனடாவில் தங்கியுள்ள வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னான்டோ - ஏற்கனவே நியூயோர்க்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைக் கூட்டத்துக்குச் சென்றிருந்த போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கனேடிய வெளிவிவகார அமைச்சருடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் தொடர்ச்சியாக, சில விடயங்களை ஆராய்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனேடிய வெளிவிவகார அமைச்சர் பில் கிரஹாமைச் சந்தித்து விரிவான பேச்சுவார்த்தைகளை நடாத்தியிருக்கும் டிரோன் பெர்னான்டோ, ஆசிய பசுபிக் பிராந்திய இராஜாங்க செயலாளர் அமைச்சர் கில்கோர், மற்றும் இலங்கைக்கும், கனடாவுக்கும் இடையிலான நாடாளுமன்ற நட்புறவுக் குழுவினரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடாத்தியுள்ளார்.

கடந்த 24 வருடங்களுக்குப்பின்னர், முதற்தடவையாக கனடாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னான்டோ, அதேபோல கடந்த இரு தசாப்தங்களின் பின்னர் எதிர்வரும் 15 ஆம் திகதி முதற் தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள, கனேடிய வெளிவிவகார அமைச்சரின் விஜயம் குறித்தும் பேச்சுவார்த்தைகள் நடாத்தியுள்ளார்.

இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள் கனடாவில் வசித்து வருகிறார்கள் என்ற அடிப்படையில், ஈழத் தமிழர் விவகாரத்தில் கனேடிய அரசுக்கு கரிசனையும், செல்வாக் கும் இருக்கும் என்ற எதிர்பார்ப்புடனேயே, இலங்கை அரசாங்கம் - சமாதான விடயங்களில், கனடாவின் பங்களிப்பைக் கோரியிருப்பதாகக் கருதப்படுகிறது.



நேற்று முன்தினம் இலங்கைக்கு வருகைதந்த அவுஸ்திரேலிய நாடாளுமன்றத் தூதுக்குழுவுக்கு தலைமை தாங்கிய ஜோன் வற்சனிற்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கைலாகு கொடுப்பதைப் படத்தில் காணலாம்.

## அவுஸ்திரேலிய

# நாடாளுமன்றக்குழு கொழும்புக்கு விஜயம்

செனட்டர்களான ஜோன் வற்சன் மற்றும் டஸ்மானியர் தலைமையிலான ஆறு பேர் கொண்ட குழுவினர், நேற்றுமுன்தினம் கொழும்புக்கு விஜயம் செய்துள்ளனர்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை இலங்கையில் தங்கியிருக்கவுள்ள இக்குழு, பிரதமருடன் நேற்று பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளது.

இச்சந்திப்பில் இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து பிரதமர் எடுத்து விளக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தவுள்ள இக்குழு, யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# களுத்துறை தமிழ் அரசியல் கைதிகள் ஐ.நா.செயலாளர் கோபி அனானுக்கு மனு

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் - ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனானுக்கு கையளிப்பதற்காக, மனுவொன்றினை அனுப்பி வைத்துள்ளனர்.

தற்போதைய சமாதானச் சூழலில் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தம்மை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரியே, அவர்கள் மனுவினை அனுப்பி வைத்துள்ளனர்.

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 60 தமிழ் அரசியல் கைதிகள் கையொப்பமிட்ட இம்மனு, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் க்ட்சியின் சிரேஷ்ட உப தலைவர் நல்லையா குமரகுருபரனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள கோபி அனானிடம் இம்மனுவை கையளிக்குமாறு கோரியே, நல்லையா குமரகுருபரனுக்கு இம்மனு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## ரவூப் ஹக்கீமிடம்

# ஆயுதங்கள் சேகரிப்பது பற்றி அமெரிக்கத் தூதுவர் விசாரிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான புதிய அமெரிக்க தூதுவர் ஜெப்ரிலங்ஸ்ரீட் - முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமைச் சந்தித்தபோது, முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதங்கள் சேகரிப்பதில் ஈடுபடுகிறார்கள் என்ற தகவல்கள்பற்றி, விசாரித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் சேகரிப்பதில் ஈடுபடுகிறார்கள் என்று, அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்த கருத்துச் சம்பந்தமாகவே, அமெரிக்க தூதுவர் - ரவூப் ஹக்கீமிடம் கேட்டுக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் சேகரிப்பதில் ஈடுபடவில்லையென்றும், அவர்கள் நியாய வழியில் நடந்துகொள்கிறார்கள் என்று அமைச்சர் ஹக்கீம் - அமெரிக்க தூதுவருக்கு விளக்கமளித்துள்ளார். இந்தச் சந்திப்பு கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்றது.

# ஜே.வி.பி - சுதந்திரக்கட்சி கூட்டில் எவ்வித மாற்றமும் இல்லையாம்!

## அனுரா பண்டாரநாயக்க



(கொழும்பு)

சுதந்திரக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் கூட்டணி அமைப்பதில் எந்தவித மாற்றமும் இல்லை. இரு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டமைப்பைக் குலைக்க ஒரு போதும் இடமளிக்கமுடியாது.

இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் நடைபெற்றுவரும் சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடைபெற்ற பேரணி - நிட்டம்புவ நகரை அடைந்தபோது, அங்கு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது -

ஜனாதிபதியின் ஆட்சிக்காலம் இன்னும் மூன்று வருடங்களில் முடிவடையும். அவர் பதவியிழக்கும்போது, நாம் ஜே.வி.பியுடன் இணைந்து கூட்டணி அமைத்தாவது ஆட்சி அமைத்துவிடுவோம் எனச் சூழுரைத்துள்ளார்.

இந்தக் கூட்டணியினை அமைக்குமாறுகோரி, பல கடிதங்கள் ஜனாதிபதிக்கு ஆலோசனை தெரிவித்து வந்தடைவதாகவும் அனுரா பண்டாரநாயக்க மேலும் தெரிவித்தார்.

## ரயில் தடம்புரண்டு 2 பேர் காயம்

(கொழும்பு)

அளுக்கமையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற புகையிரத வண்டி ஒன்று, அளுத்கமேக்கு அண்மையில் தடம்புரண்டதில் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தப் புகையிரத வண்டியில் பயணம் செய்த நூற்றுக்கணக்கான மக்கள் எதுவித காயமும் இன்றி உயிர்தப்பியுள்ளனர்.

(07)

# சமாதான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுமென நம்பிக்கை

## நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகசபை குறித்த மாற்று யோசனைகளை - விடுதலைப்புலிகள் அரசிடம் கையளித்ததும், இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாகும் என, இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கார் நம்பிக்கை தெரிவித்தார்.

அநுராதபுர மாவட்டச் செயலாளர் அலுவலகத்தில் - அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை, நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடிய போதே, அவர் இந்த நம்பிக்கையை தெரிவித்தார்.

இலங்கையின் கடற்றொழில், சுகாதாரத்துறை என்பவற்றை விருத்தி செய்ய, நோர்வே உதவி செய்யும் எனவும் அவர் அங்கு தெரிவித்தார்.

அத்துடன், இலங்கையின் வரலாற்று, கலாசார முக்கியத்துவம் வாயந்த சின்னங்களை உலக பாரம்பரிய சொத்துக்களாக்கி பாதுகாப்பதற்கு வேண்டிய உதவியை வழங்க நோர்வே முன்வந்திருப்பதாகவும் ஹான்ஸ் பிரஸ்கார் தெரிவித்தார்.

# தமிழ் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியினை பார்வை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரால் மக்கள் வாழ்விடங்களில் அமைக்கப்பட்டுள்ள உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான நிலைமைகளை, அந்தப் பகுதிகளுக்குச் சென்று தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பார்வையிட்டுள்ளனர்.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான - என்.ரவிராஜ், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மாவை சேனாதிராஜா, சிவாஜிலிங்கம் ஆகியோரே உயர் பாதுகாப்பு வலயமாகவுள்ள பல பிரதேசங்களுக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டவர்களாவர்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பாகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் அதிகமான கவனத்தை எடுத்துள்ளதுடன், இது தொடர்பான அழுத்தங்களை அதிகரிக்கவும், மக்கள் இதனால் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் - பிரதமர் உட்பட இதனுடன் தொடர்புபட்ட அனைவருடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பினர் - தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரிக்குச் சென்று, அங்குள்ள நிலைமைகளை அவதானித்ததுடன், இந்தப் பாடசாலைக்கு வரும் மாணவர்களை -இராணுவத்தினர் சோதனை செய்வது தொடர்பாகவும் படை அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளனர்.

எதிர்வரும் ஏழாம் திகதிக்குப் பின்னர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்கவுள்ள கூட்டமைப்பினர், உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாகப் பேச்சுவார்த்தையை நடாத்தவுள்ளனர்.

## விண்ணப்பம் கோரல்

கொழும்பு பல்கலைக்கழகத்தில் தகவல் முகாமைத்துவம் தொடர்பான கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

க.பொ.த.சாதாரண தரத்தில் ஆங்கிலம், க.பொ.த.உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இந்த கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம். பிரதி ஞாயிறுதோறும் காலை 9 மணிதொடக்கம் 4 மணி வரை இந்தக் கற்கைநெறி இடம் பெறும்.

# பிரஜாஉரிமை திருத்தச் சட்டப் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இரண்டு இலட்சம் இந்திய வம்சாவளியினரின் - பிரஜா உரிமைகள் இதுவரை வழங்கப்படாமை தொடர்பாக, எதிர்வரும் ஏழாம் திகதி. பிரஜா உரிமைகள் திருத்தச் சட்டமூலப் பிரே ரணை, நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது.

நாட்டிலுள்ள பிரஜா உரிமையற்றோர் பிரச்சினைகளுக்கு, நிரந்தரத் தீர்வுகாணும் முகமாகப் பிரஜா உரிமைத் திருத்தச் சட்ட மூலம் பிரேரணை, கடந்த மாதம் 23 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்பபிக்கப் பட்டது.

இந்தச் சட்டமூலப் பிரேரணை- நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டதும், இரண்டு இலட்சம் இந்திய வம்சாவளி மக்கள் பிரஜா உரிமை பெறுவதுடன், இத்துடன் பிரஜா உரிமையற்றவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுவிடுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

# அந்நிய கலாசார விழுமியங்களில் இருந்து ஊடகங்கள் மக்களை விடுவிக்கவேண்டும்

## யாழ்.மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி



எமது மக்களின் வாழ்வியலில் ஏற்பட்டுள்ள அந்நிய கலாசார விழுமியங்களிலிருந்து, அவர்களை விடுவிக்கவேண்டிய சமூகப் பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு. இந்தப் பொறுப்பையேற்று மக்களின் வாழ்வியலில் ஏற்பட்டுள்ள மாற்றத்திலிருந்து, மீட்டு அவர்களை நல்வழிப் படுத்துவதில் ஊடகங்களின் பங்கு அவசியம்.

இவ்வாறு யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் கலைவிழி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'நமது ஈழநாட்டின்' முதலாம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போது, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு உரையாற்றும் போது மேலும் தெரிவித்ததாவது -

எமது தேசத்திலே ஊடகங்களின் பங்கு மிகவும் முக்கியமானதாக இருக்கும் இந்தக் காலத்திலே, மிகவும் நெருக்கடிகளின் மத்தியிலும், தனது சேவையை ஆற்றிக் கொண்டிருக்கும் நமது ஈழநாட்டிற்கு- விடுதலைப்புலிகள் அமைப்பின் சார்பில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய இந்த நிகழ்வில் மிகவும் பொது நோக்கத்துடன் இங்கு கூடியிருக்கும் அனைவருக்கும், இந்த நிகழ்வின் பின் நிச்சயமாக ஒன்றை எமது மனங்களிலே சுமந்து செல்லவேண்டும்.

எங்களுடைய நாட்டிலே, எங்களுடைய தேசத்திலே, எங்களுடைய சமூகத்திலே - நாங்கள் போலியான ஒரு கற்பனை உலகத்திலே இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அந்தக் கற்பனை உலகத்தை ஏற்படுத்திய சில ஊடகங்களினால், எமது மக்களுடைய மனங்களில் பல தீய விதைகள் விதைக்கப்பட்டுள்ளன. தமது துயரத்தை, இன்னல்களை மறந்தவராகத் தமது சுயத்தைத் தொலைத்து, இன்னொரு நிகழ்வுக்குள்ளே தங்களைப் புகுத்திக் கொண்டவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, எங்களுடைய உண்மைநிலை எது? எமது ஒழுக்கை எது? இன்றைய சூழல் எவ்வாறானது என்பதைத் தெளிவான முறையிலே எமது மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டிய கடமை இந்த ஊடகங்களுக்கு உண்டு. அந்தப் பணியை நமது ஈழநாடும் ஆற்ற வேண்டும்.

எங்களுடைய சமூகமானது, எப்பொழுதும் தமக்கு என்றொரு தனித்துவத்தை கொண்டது. நாம் இவ்வாறு தான் இருக்க வேண்டும். தமக்கு எனத் தனியான பண்பாடு, கலாசார விழுமியங்கள் உள்ளன எனும் எண்ணத் தோடுவாழ்ந்து கொண்டிருந்தனர்.

அந்தக் காலத்திலிருந்து மிகவும் வித்தியாசமான முறையிலே, நாம் எமது சமூக, விழுமியக் கட்டுக் கோப்பிற்கு வெளியே செல்லும் நடவடிக்கையிலே ஈடுபட்டு கொண்டுள்ளோம். எமது மக்கள் அதை மனப் பூர்வமாக ஏற்றுக்கொள்ளாத நிலையிலும் அதற்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். அந்தநிலைக்கு மக்களை மாற்றவேண்டும் எனப் பல சக்திகள் செய்யப்பட்டு கொண்டுள்ளன.

எமது மக்களை, எமது சமூக விழுமியங்களில் இருந்து வேறு ஒரு பாதைக்கு செல்லவிடாது காப்பாற்ற வேண்டிய பொறுப்பு - ஊடகங்களுக்கு உண்டு. அந்தப் பொறுப்பை எமது மக்களிடையே இருக்கும் களைகளை அகற்றி, சரியான பாதையை அவர்கள் காட்டவேண்டும். அதனூடாக எமது மக்களிடையே வளர்ந்து வரும் அந்தக் கற்பனை உலகு உடையவேண்டும். சரியான வழி எது என மக்கள் அறிந்து, அதன் வழி செல்லவேண்டும். இந்தப் பணியை எமது ஈழநாடு திறம்பட ஆற்றவேண்டும். எனத் தெரிவித்தார்

# சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் சர்வதேச நல்லொழுக்க தினவிழா

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழக அனுசரணையுடன், வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடாத்தும் சர்வதேச நல்லொழுக்க தினம் இன்று நடைபெறவுள்ளது.

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் இ.இராசலிங்கம் தலைமையில் பகல் 12 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

இந்த நிகழ்வில் இளைப்பாறிய மாவட்ட நீதிபதி எம்.திருநாவுக்கரசு, சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய அதிபர் ச.கைலாசநாதன், யாழ்ப்பாணம் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் தி.சிவதட்சணாமூர்த்தி, யாழ்ப்பாணம் தொழில் திணைக்கள சிரேஷ்ட தொழில் உத்தியோகத்தர் பி.அ.துரைசிங்கம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்துகொள்வர்.

# மிதிவெடியில் சிக்கி இளம்பெண் காலை இழந்தார்

அச்சுவேலியில் நேற்று மிதிவெடியில் சிக்கிய இளம் குடும்பப்பெண் ஒருவர், தனது வலதுகாலை முழங்கால் பகுதியுடன் துண்டிக்கப்பட்ட நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கதிரிப்பாய் - அச்சுவேலியைச் சொந்த இடமாகக் கொண்ட இந்திரகுமார் புஸ்பா (வயது 29) என்ற இளம் குடும்பப்பெண்ணே, தனது வலதுகாலை இழந்துள்ளார்.

தனது வீட்டிற்கு அருகாமையிலுள்ள காணியில் ஆட்டிற்கு குழை வெட்டுவதற்கு மதிலுக்கு அண்மையாகச் சென்றபோதே இச் சம்பவம் நடைபெற்றது.

## திருகோணமலையில்

# அறுநூறு விவசாயிகளுக்கு செஞ்சிலுவைச் சங்கம் உதவி

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோணமலைக் கிளையினரும், ஸ்பானிய செஞ்சிலுவைச் சங்கத்தினரும் இணைந்து - திருகோணமலையில் 600 விவசாயிகளுக்கு, விவசாய உபகரணங்களையும், விவசாய உள்ளீடுகளையும் வழங்கி வருகின்றனர்.இதன் முதற்கட்டமாக நேற்று முன்தினம் சேனையூர் - பள்ளிக்குடியிருப்பில், 50 விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்களும், உள்ளீடுகளும் வழங்கப்பட்டன. நேற்று கடற்கரைச் சேனையிலுள்ள கட்டைபறிச்சான் கிராமத்திலுள்ள 65 விவசாயிகளுக்கு இந்த உள்ளீடுகளும், விவசாய உபகரணங்களும் வழங்கப்பட்டன.

தொடர்ந்து திருமலை மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலுமுள்ள விவசாயிகளுக்கு இந்தப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன. (04)

# கலந்துரையாடல்

ஹற்றன் நஷனல் வங்கியினால் விவசாய கடன் கொடுப்பனவு சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று சனிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.இந்நிகழ்வில் மேற்படி வங்கியின் கடன் கொடுப்பனவு சம்பந்தப்பட்ட அதிகாரி முரளிதரன் பங்குபற்றி விரிவுரைகளை வழங்கவுள்ளார் அரசசார்பற்ற வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு, பெறக்கூடிய கடன் திட்டங்கள் பற்றி தலைவர் க.பசுபதி எடுத்தியம்ப இருக்கிறாரெனவும், கரணவாய மத்தி விவசாயக் குழு தெரிவித்துள்ளது.

# கரவெட்டி பிரதேசத்தின் செயலர் பிரிவில் சமுர்த்தி மகா சங்கம் தெரிவு நடைபெறும்

கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள, சமுர்த்தி வங்கிச் சங்கங்களை ஒன்றிணைத்து, சமுர்த்தி மகா சங்கம் ஒன்று கரவெட்டி பிரதே செயலகப் பிரிவில் அமையவுள்ளது.

மகாசங்கத்திற்கு 21 பேர் கொண்ட நிறைவேற்று குழு, எதிர்வரும் திங்கட்கிழமையன்று முற்பகல் 10. மணிக்குப் பருத்தித்துறை சிவன் கோவில் திருமண மண்டபத்தில் நடைபெறும் சம்மேளனப் பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் 250 இற்கு மேற்பட்ட சமுர்த்திச் சங்கங்களின் தலைவர்கள் பங்கு பற்றுவர். பிரதேச செயலர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள் ஆகியோரின் பங்கேற்புடனும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடனும் இச்சம்மேளனக் கூட்டம் நடைபெறவுள்ளது.

நிறைவேற்றக் குழுவில் அங்கம் பெறுவதற்கான தெரிவு - மிகுந்த போட்டியின் மத்தியில் நிகழுமென எதிர்பார்க்கப்படுகிறது. சமுர்த்திச் சங்கத் தலைவர்கள் தத்தம் பிரிவின் முதன்மையை வெளிப்படுத்தும்முகமாக, தமக்கிடையே வாக்குப் பிரசாரத்தை மேற்கொள்கின்றனர்.

அமையவிருக்கும் சமுர்த்தி மகா சங்கத்திற்கு, முகாமைத்துவப் பணிப்பாளராக சமுர்த்தி முகாமையாளர் ஒருவர் நியமனம் பெறுவார். நிறைவேற்றுக் குழுவின் தலைவரே மகா சங்கத்தின் தலைவருமாவார்.



உடற்கல்வித்துறை டிப்ளோமா பட்டதாரிகள் - தமக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுத்தர உதவுமாறு கோரி, யாழ்.அரச அதிபரின் பிரதிநிதியிடம் நேற்று முன்தினம் மகஜர் ஒன்றைக் கையளித்த போது எடுக்கப்பட்ட படத்தைக் காணலாம்.


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ரே.மிதுஷின்யூட்
முகவரி : 32,சந்தனமாதா லேன், பாண்டியன்தாழ்வு

இரண்டாவது அகவையில்



பெயர் : ர. சாலினி
முகவரி : சின்னாளப்பட்டி, இந்தியா.

மூன்றாவது அகவையில்



பெயர் : ஸ்ரீ.ஜனுக்ஷி
முகவரி : ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.

நான்காவது அகவையில்



பெயர் : க.கலாநிகன்
முகவரி : வளலாய், அச்சுவேலி.

ஆறாவது அகவையில்



பெயர் : சி.சங்கவி
முகவரி : 33,1ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------

முகவரி :------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

---------------------
பெற்றார் ஒப்பம்




# நாம் இழந்து விட்டோம் என்பதற்காக

ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள செயற்திறன் அரங்க நிறுவனத்தை நோக்கி எனது துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருக்கின்றேன். இடையில்



மெல்லிய மழைத்தூறல்களுடன் நிறுவனத்தை அடைகிறேன். ஏற்கனவே அறிமுகமானபடியால், இன்முகத்துடன் வரவேற்றனர் நிறுவனத்தினர். அவர்களுடன் உரையாடிக்கொண்டிருக்கின்றேன்.



மேல்மாடியில் நாடகம் ஒத்திகை பார்த்துக்கொண்டிருந்த சந்திரரூபி, எனது உரையாடலை இடைமறிக்கிறார். நான் ரூபியின் சிறு அறிமுகத்துடன் எனது செவ்வியைக் ஆரம்பிக்கிறேன்.

செல்வி சந்திரரூபி சந்திரசேகரன் - அளவெட்டியைச் சேர்ந்தவர். அருணோதயாக் கல்லூரியில் ஆரம்பம்முதல், உயர்தரம் வரை கல்வி கற்றவர். 1987 ஆம் ஆண்டு விமானத் தாக்குதலினால், தனது வலது காலை இழந்தும், பலதுறைக்ளில் சாதித்துவருபவர். போட்டிகளில் பங்குபற்றிப் பல பரிசில்களைப் பொற்றுள்ளார். தையல், பெண் அலங்காரம் என்பவற்றில் டிப்பிளோமா பெற்றுள்ளதுடன், இப்பொழுது சிறந்த நாடகக் கலைஞராகவுமுள்ளார். ரூபி தனது பாடசாலை வாழ்க்கைமுதல், இன்று செயற்திறன் அரங்கில் அங்கத்தவராக உள்ளமைவரை, சற்றும் தளம்பாது, மிக நேர்த்தியாக, தான் கடந்து வந்த பாதையை மீட்டுப் பார்க்கிறார்.

எனது பள்ளிப் பருவத்தில் எனது காலை இழந்தாலும், நான் மனம் தளராது பாடசாலையிலும் சரி, வீட்டிலும் என்னால் இயலுமான வேலைகளைச் செய்வதுடன், எனது வேலைகளை நானே மேற்கொண்டேன், மேற்கொண்டு வருகிறேன். எனது பயணங்கள் ஆரம்பத்தில் பஸ் போக்குவரத்தாக இருந்தது. ஆனால், இப்போது சைக்கிள், மோட்டார் சைக்கிள் பாவிக்கிறேன். எனது பயணங்களை, நினைத்தவுடன் மேற்கொள்ளக்கூடிய மனப்பக்குவம் தற்போது என்னிடம் வந்துள்ளது. இதற்கெல்லாம் காரணம் - எனது பெற்றோர்களது தளராத தட்டிக்கொடுப்பும், எனது விடாமுயற்சியும், தன்னம்பிக்கையுமே காரணமாகும் என, சற்று உணர்ச்சிவசப்பட்ட நிலையில் குறிப்பிடுகிறார்.

தொடர்ந்து ஜெய்ப்பூர் நிறுவனத்தில், தான் சக அங்கத்தவர்களுக்கு முன் மாதிரியாகத் திகழ்ந்தமைக்கு, அங்கு எனக்கிருந்த அன்பான அணுகுமுறையும், எதையும் மனம்விட்டுப் பாராட்டும் தன்மையுமே காரணமாகும். எமது ஆண்டு விழாவிலே தொடர்ச்சியாக சைக்கிள் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தை நானே தக்கவைத்துக் கொண்டதுடன், மெய்வல்லுநர் போட்டிகளிலும், தனி நடனம், மயில் நடனம் எனக் கலை நிகழ்வுகளிலும் எனது திறமைகளை வெளிக்காட்டிக் கொண்டிருந்தேன். இப்பவும் அது தொடர்கிறது எனச் சற்று இருக்கையில் நிமிர்ந்து அமர்ந்தவாறு புன்னகைக்கிறார்.

இவ்வாறு புன்னகைக்கும் ரூபியிடம், உங்கள் வளர்ச்சியின் பின்புலம் பற்றிக் கூறுவீர்களா? என எனது கேள்வியை ஆரம்பிக்க... எனது வளர்ச்சிக்கு என் அப்பா, அம்மா தான் முழுக்காரணம். இதில் நான் ஒன்றைக் கூறவேண்டும் எனத் தொடர்கிறார். நான் சைக்கிள் பழகும்போது, நிறையவே வீழ்ந்து எழும்புவேன். நான் எப்படியும் பழக வேண்டும் என்ற தளராத எண்ணம் எனது பெற்றோரிட்ம் இருந்தது. இதற்கான உதவிகளைச் செய்வார்கள். அவ்வாறே வீட்டிலும் எனக்கென உரிய வேலைகளைச் செய்யும் போதும், அவர்கள் தடுப்பதில்லை. ஏனெனில், நான் இனிவரும் காலங்களில் எவரிலும் தங்கியிருக்கக் கூடாது என்ற எண்ணத்திலாகும். நான் எந்தச் செயற்பாடுகளையும் துணிந்து மேற்கொள்வதுடன், என் பெற்றோரின் பாராட்டுதல்களும், ஊக்குவிப்புகளும், அவர்களின் பரந்த மனமுமே நான் இன்று இவ்வாறிருக்கக் காரணம் என்றால், அது மிகையாகாது.

இப்போது நாடகத்துறையில்

# முயற்சி செய்யாமல் இருக்கமுடியாது

மட்டுமன்றி, வேறுபல செயற்பாடுகளையும் மேற்கொள்கிறீர்கள். இவற்றை எங்களுடன் பகிர்ந்து கொள்வீர்களா? என்றதும்... நான் நாடகத்துறைக்கு வருவேன். எனது சொந்த அனுபவத்தின் மூலம் பெருமளவிலான மாணவர்கள், மக்களை விழிப்படையச் செய்வேன் என ஒரு போதும் நினைத்துக்கூடப் பார்த்ததில்லை. இதற்கு முன்னர் தையல், கேக் ஐசிங், பெண் அலங்காரம் என எங்கள் பிரதேசம் மட்டுமன்றி, அயல் பிரதேசங்களுக்கும் சென்று எனது சேவையை வழங்கி வந்தேன். இதனால், எனது வேலைகளைப் பலரும் விரும்பி வந்து பெறக்கூடியளவிற்கு எனது சேவை வளர்ச்சியடைந்திருந்தது. இவ்வாறு தனது திறமைகளைப் பெருமையுடன் குறிப்பிட்டார்.

வெளியுலகிற்கு உங்களை இனங்காட்டியது எவை எனக் கூறுவீர்களா எனக் கேட்டபோது, நான் ஒரு காலை இழந்து அங்கவீனராகிவிட்டேன். இனி என்னால் ஒன்றும் செய்ய இயலாதே நான் இனி பிறிதொருவரில் தங்கிவாழ வேண்டுமே என்ற




எண்ணத்தை மறந்து, ஒவ்வொரு செயற்பாடுகளையும் விடாமுயற்சியுடன் மேற்கொண்டு வந்தேன். இவற்றுடன் ஊனமுற்றோர் சங்கம், ஜெய்ப்பூர் நிறுவனம், இப்போது செயற்திறன் அரங்க இயக்கம் என்பவற்றில் அங்கத்தவராகவுள்ளமையாலும், இவற்றின் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் பங்கு கொள்வதனாலுமே, வெளியே என்னை ஏனையோர் தெரிந்துகொள்ளக் காரணமாகும் என மிக உறுதியாகக் கூறும் ரூபியைத் திசை திருப்பும் நோக்கில்,

அங்கவீனம் வாழக்கைக்கு தடைதானா என்று வினவியபோது, என்னைப் பொறுத்தவரை இல்லை. எங்களாலும் முடியும் என்று எல்லோரும் முன்வரவேண்டும். எனக்கு இப்படியாகிவிட்டதே என்று வாழ்நாள் முழுவதும் அதையே நினைத்து மனம் வருந்தாமல், உரிய அமைப்புக்களுடன் தொடர்புகொண்டு, உரிய முறையில் பயிற்சிகளை மேற்கொண்டு, எங்களுக்கு என ஒரு இடத்தைத் தக்கவைப்பதுடன், பிறரில் தங்கிவாழும் மனநிலையை அடியோடு மறந்து, பிறருடன் சேர்ந்து எங்களாலும் வாழமுடியும் என்று வாழ்ந்தால், எதுவுமே தடையாக அமையாது என்பது எனது கருத்தாகும் எனத் தன்னம்பிக்கையுடன் கூறுகின்றார் ரூபி.

உங்கள் வாழ்வில் திருப்பம் என நீங்கள் எதனைக் கருதுகிறீர்கள் என்றவுடன், நான் செயற்திறன் அரங்க இயக்கத்தில் இணைந்து, நாடகக் கலைஞராக மாறியமையே எனது வாழ்வின் திருப்புமுனை. இப்போது 'இடர்கள் கெடுக', 'மகிழ்ந்து கற்போம்' என்ற நாடகத்தின் மூலம், பெருமளவிலான மாணவர்களையும், மக்களையும் சந்திக்கும் வாய்ப்பும், பல புது முகங்களின் அறிமுகமும், அன்பான அணுகுமுறையையும் பெறமுடிவதுடன், பல இடங்களைப் பார்க்க முடிகிறது. அத்துடன், மக்களின் வாழ்க்கை முறைகளையும், அவர்கள் எதிர்நோக்கும் சவால்களையும் அறிய முடிகிறது. இவை என்னால் ஒரு போதும், மறக்க முடியாத ஒன்றாகவே இருக்கும். இதுவே எனது வாழ்வின் திருப்பமாகும், என்று கூறும் ரூபியிடம்,

நீங்கள் நாடகத்துறையில் உங்களை முழுமையாக இணைத்துள்ளீர்கள். இதற்கான காரணம் என்னவாக இருக்கும் என்று வினாவியபோது... நாடகத்தில் எனது சொந்த அனுபவத்தையும், அதனால் ஆரம்பத்தில் நான் அனுபவித்த வேதனைகளையும் வெளிக் கொணர்கிறேன். இவ்வாறு என்னைப் போன்றவர்கள் இனியும் வரக்கூடாது என்ற காரணத்தினாலேயே நான் இவ்வாறு ஈடுபட்டு வருகிறேன் என்றார்.

நான் செவ்வியை நிறைவு செய்யும் நோக்கில் இறுதியாக நீங்கள் கூறவிரும்புவது என்ன என்றேன். அதற்கு, பாதிக்கப்பட்டவர்கள் "எங்களால் இயலாது என்று வீட்டிலேயே இருந்து மனமுடையாது, ஏனையவர்களின் உதவியை நாடியே நாம் வாழ வேண்டும் என்ற மனநிலையை மாற்றி, எமது தேவைகளை நாங்களே மேற்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தை என்னைப் போன்ற ஒவ்வொருவரும் மனதில் ஏற்று, ஒவ்வொருவரும் மன நிறைவுடனும், தன் தன்நம்பிக்கையுடனும், துணிவுடன் செயற்பட வேண்டும் என்பதையே என்னைப் போன்றவர்களிற்கு நான் கூற விரும்புகிறேன் என்றார்.

நான் ஒரு முழுமையான செவ்வியைப் பெற்றவுடன், தன் நம்பிக்கையே - வாழ்க்கைக்கு, வாழ்வின் வளர்ச்சிக்குப் பெரும் உதவியாக அமையும் என்ற எண்ணத்தைப் பெற்ற திருப்தியுடன், செல்வியை நிறைவு செய்து எனது அலுவலகம் நோக்கி என் பயணத்தைத் தொடர்ந்தேன்.

காவலூர் - விஜேந்திரன்

# தாய்ப்பால் முதல் — முதலுதவி வரை

## குளியல்

சூடானநீரில் குழந்தைகளைக் குளிப்பாட்டினால், அவர்களின் எல்லா வருத்தங்களும் மாறி விடும் என்பதெல்லாம் தவறு. மிகவும் சூடான நீர் பாவிக்க வேண்டாம். ஓரளவு இளஞ் சூடான நீரே போதுமானது.



உச்சிமுதல் பாதம்வரை ஒவ்வொருநாளும் குழந்தையைக் குளிப்பாட்ட வேண்டும் என்பதில்லை. கழுத்துக்குக் கீழே குளிப்பாட்டினால் போதும், முகத்தைத் துடைத்துவிடுங்கள். கிழமைக்கு ஒருதரம் தலைக்குக் குளிப்பாட்டுங்கள்.

குழந்தையின் முகத்தைப் பாத்து, நாம் மெய்மறந்து போவது இயல்பானதுதான். இடையிடையே குழந்தையின் நாக்கையும் பாருங்கள். அதில் மாப் போல் ஒரு படலம் ஒட்டிக் கொண்டிருக்கும். குளிப்பாட்டும் போது, அந்தப் படலத்தை மென்மையாக அகற்றி விடுங்கள். வேறு முறையெதுவும் பாவித்து, குழந்தைகளுக்கு அப்படலததை அகற்ற வேண்டாம்.

நாக்கைப் பார்க்க மறக்கும் தாய்மார்கள்கூட, தவறாமல் பார்ப்பது குழந்தைகளின் காதுகளை. காதுகளுக்குள் அழுக்கு இருக்கிறது என்று பதறி, பஞ்சையோ வேறு எதனையுமோ எடுத்துச் சுத்தம் செய்யத் தொடங்கி விடவேண்டாம். குளிக்கும்போது, குழந்தையின் காதின் வெளிப்பகுதியை மட்டும் சுத்தம் செய்யுங்கள். குழந்தைகளுக்கு அது போதுமானதாகும். சுத்தம் செய்வதாக நினைத்துக்கொண்டு, காதுகளின் மென்மையான உட்புறத்துக்கு எந்தவிதமான ஆபத்தையும் ஏற்படுத்திவிடாதீர்கள்.

எவ்வாறான சவர்க்காரத்தைப் பயன்படுத்தி, குழந்தைகளைக் குளிப்பாட்டுவது? தரமான எந்தவிதமான சவர்க்காரத்தையும் பயன்படுத்தலாம். நேரடியாக அதைக் குழந்தையின் உடலில் தேய்ப்பதைவிட, உங்கள் கைகளில் சோப்பைக் கரைத்துக் கொண்டு, அதை உங்கள் குழந்தையின் உடலில் தேய்ப்பது சரியான முறையாகும்.

முகத்தைச் சுத்தமாகவும், பளபளப்பாகவும் வைத்திருக்கக் கடலை மாவும், கூந்தலுக்குச் சீயாக் காயும் ஏற்றது என்பதை மேலை நாட்டு அழகுக் குறிப்புகள் கூட ஏற்றுக்கொள்கின்றன. ஆனால், குழந்தைகளுக்கு இவற்றைப் பயன்படுத்துவது நல்லதல்ல. காரணம்



என்னவெனில், சில சமயங்களில் இவை குழந்தைகளுக்கு ஒவ்வாமையை ஏற்படுத்த வாய்ப்புண்டு.

காலங்காலமாகக் குழந்தைகளுக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டுவது நல்லதா? இல்லையா? எனப் பல தாய்மார்களுக்குச் சந்தேகம் இருந்து வருகின்றது. எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டுவது தீமையில்லை. அதேசமயம், குழந்தையின் உடலுக்குள் புதிதாக எந்தவித சத்தோ, மாற்றமோ இதனால் சேர்ந்துவிடுவதில்லை. ஆனால், ஒன்றை நாம் மறந்து விட முடியாது. உலர்ந்த சருமத்திற்கு எண்ணெய் நல்லது என்பதனை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

# முடக்கத்தான் கீரை சூப்

**தேவையான பொருட்கள்:-**

ஒரு கைப்பிடி முடக்கத்தான் கீரை

| | | |
|---|---|---|
| மிளகு | - | 10 |
| சுக்குப்பொடி | - | அரை தேக்கரண்டி |
| பெருங்காயம் | - | கால் தேக்கரண்டி |
| பூண்டு | - | 5 பல் |
| பெருஞ்சீரகம், சின்னச்சீரகம் | - | தேவையான அளவு |
| சின்ன வெங்காயம் | - | தேவையான அளவு |
| உப்பு | - | தேன்வயான அளவு |
| நெய் | - | ஒரு தேக்கரண்டி |

**செய்முறை:**

முடக்கத்தான் கீரையுடன், சின்னச்சீரகம், பெருஞ்சீரகம், வெட்டிய வெங்காயம், பூண்டு, பெருங்காயம், சுக்குப்பொடி, மிளகு ஆகியுவற்றைப் போட்டு, நெய்யும் சேர்த்து 2 ரம்ளர் தண்ணீர் விட்டு, ஒரு ரம்ளராக வற்றும்வரை அடுப்பில் வைத்துக் காய்ச்சவும.



ஓரளவான சூட்டுடன் பருகவும். இதனை அடிக்கடி பருகுவதால் வாதவலிகள், வீக்கம் போன்றவைகள் மறையும்.

இது ஒரு மலமிளக்கியாகவும் செயற்படுகின்றது.

# பிறருக்கு உதவுவோம்

குழந்தைகள் வளர்ந்துவருகின்றபோது சிறிதாகிப் போன உடைகளையும், பழைய சேலைகளையும் பல பெண்கள் அடுக்கிவைத்திருப்பதையோ அல்லது பாத்திரக்காரனுக்குப் பண்ட மாற்றாகக் கொடுப்பதையோ வழக்கமாகக் கொண்டுள்ளார்கள். அதே போல், குழந்தைகள் விளையாடி அலுத்துப்போய்த் தூக்கிப்போடும் பொம்மைகளையும், விளையாட்டுப் பொருட்களையும் வீட்டின் ஒரு மூலையில் சேர்த்துவைத்திருப் பார்கள்.



நடுத்தர மற்றும் உயர்தர குடும்பங்களில், தேவை இருக்கிறதோ இல்லையோ, புதிதுபுதிதாகத் தைக்கப்பட்ட ஆடைகளும், பொம்மைகளும் வாங்கிக் குவிப்பது தற்பொழுது அதிகமாகி வருகிறது.

புதிதாக நான்கு வாங்கினால், பழசாகி உபயோகமில்லாமல் இருப்பவைகளை, அவை தேவைப்படுபவர்களுக்குத் தாராளமாக நாம் கொடுத்து உதவ முடியும். எம்மைச்சுற்றி உதவி தேவைப்படுபவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கலாம். இவர்களைத் தவிர, இன்று எம்மத்தியில் பல அனாதை இல்லங்கள் இருப்பது எமக்குத் தெரியும். அந்தக் குழந்தைகளுக்கு எங்களுடைய உதவி நிறையத் தேவை.

சிறிதாகிப்போன உடைகள், விளையாடி அலுத்துப்போன பொம்மைகள், புத்தகப் பைகள், பென்சில், குடைகள், மூன்று சக்கர சைக்கிள்கள், நல்ல கதைப் புத்தகங்கள், அகராதிகள்..... இப்படிப் பட்டியல் நீண்டுகொண்டே போகும்.

எப்போதாவது தேவைப்படும் என்று அலுமாரிகளிலும், பரணிலும் சேர்த்து வைத்துக் கொண்டு, புதியவற்றுக்கும் இடமில்லாமல், எலி கடித்து, யாருக்கும் பிரயோசனமில்லாமல் தூக்கி யெறிவதைவிட, அவை யாருக்குத் தேவைப்படுமோ அவர்களுக்குக் கொடுத்து விடுவதே நல்லது. இதனால், எங்கள் வீடு சுத்தமாகிறது. கொடுத்தோம் என்ற மனநிறைவை எங்களுக்கும், பெற்றுக் கொள்பவர்களுக்கு மகிழ்ச்சியையும் தருகிறது.

சரி, கொடுப்பது என்று முடிவாகிவிட்டது. அவற்றை அப்படியே தூக்கிக் கொடுத்து விடாதீர்கள். சில உடுப்புகள் பாவனைக்கு உதவாமல் இருக்கும். அவற்றை விட்டுவிடலாம். ஏனையவற்றில் கிழிசல் இருந்தால் தைத்து, பொத்தான் இல்லாமல் இருந்தால், அதைச் சரிசெய்து, நன்றாகத் தோய்த்துக் காயவைத்து, மடித்து பொதி செய்து அன்புடன் கொடுக்கவேண்டும்.

முக்கியமாக வீட்டுக் குழந்தைகளைக் கொண்டே கொடுக்கச் செய்யலாம். இதனால், அவர்களுக்கும் உதவிசெய்யும் பழக்கம் சிறுவயதிலிருந்தே ஆரம்பித்துவிடும். பெற்றுக்கொள்பவர்கள் எம்மைவிட வசதி குறைந்தவர்கள், உதவி தேவைப்படுபவர்கள், அவர்களுக்கு நாங்கள்தான் உதவவேண்டும் என்பதையும், அவர்களுக்கு விளக்கமாகச் சொல்லுங்கள். அடுத்தமுறை அவர்களே அவை தேவைப்படுபவர்களுக்குக் கொடுக்கச் சொல்லுவார்கள்.

இது மட்டுமல்லாமல், குழந்தைகளின் பிறந்த நாட்களை விமரிசையாக் கொண்டாடுபவர்களுக்கும் ஒரு தாழ்மையான வேண்டுகோள்.

வசதியான குழந்தைகளை அழைத்து கேக்கும், குளிர்பானங்களும் வழங்கி, பரிசுகளைப் பெறுவதுடன், அனாதை இல்லத்திலுள்ள குழந்தைகளுக்கும் அன்றைய தினம் உணவளித்து, பரிசுப்பொருட்கள் கொடுத்து மகிழ்வித்து, அவர்களுடைய மனப்பூர்வமான வாழ்த்துக்களை உங்கள் குழந்தைகளுக்குப் பெற்றுக்கொடுங்கள்.

உண்மையான மகிழ்ச்சி என்பது பிறருக்குக் கொடுப்பதில்தான் இருக்கிறது. அந்த மகிழ்ச்சியை நீங்களும், உங்கள் குழந்தைகளுடன் சேர்த்து அனுபவியுங்கள்.

# கணவன் - மனைவி நண்பர்களானால்....

இல்லறவாழ்வில் பல்வேறு பிரச்சினைகள் இடம் பெறுவது இயல்பு. அதில் ஒன்று கணவன் - மனைவிக்கிடையில் எழுகின்ற சந்தேகம் என்ற கொடியநோய். கணவன் - மனைவி இருவரில் ஒருவருக்கு, மனதில் சந்தேகம் பிறந்துவிட்டால், அதற்குப் பதிலாகச் சந்தோஷம் இல்லாமல் போய்விடுகிறது. சந்தேகம் தொடர்ந்து நீடித்து நிலைப்பதற்குச் சிறியதொரு நூல் இடைவெளி போது மானதாக இருக்கிறது.



அந்த இடைவெளியை கணவன் - மனைவியே ஏற்படுத்தி விடுகின்றார்கள். மனதுக்குள் பதுக்கி வைப்பதன் மூலமாகத்தான் அதிகப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எமக்குத் தீராத பிரச்சினைகள் ஏற்பட்டு மனச்சுமைகள் அதிகரித்துவிட்டால், எம்மோடு பழகுகின்ற நம்பிக்கைக்குரிய நண்பியிடம் அப்பிரச்சினையைக் கதைக்கும் பொழுது - மனதிற்கு சற்று ஓய்வும், நிம்மதியும், ஆலோசனையும் கிடைக்கிறது.

அந்த வகையில் கணவன் - மனைவி ஒருவருக்கொருவர் நண்பர்களாக இருந்துவிட்டால், வாழ்வில் எந்தப் பிரச்சினைகளும் நிலைத்து நிற்கப்போவதில்லை.

எனவேதான், கணவன் - மனைவி யாராவது ஒருவருடைய மனதில் குழப்பங்கள் இருந்தால் அல்லது ஏதாவது ஒரு விடயம் சம்பந்தமாகச் சந்தேகம் உள்ளத்தில் ஊடுருவினால், உடனே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். எதையும் மறைத்துவிடாமல், மனம் திறந்து கதையுங்கள்.

இவ்வாறு நண்பர்களாக நினைத்து விளையாட்டாக கேட்டு விடுவதினால், உடனுக்குடன் பதிலும் கிடைக்கும். உங்களது உள்ளமும் தெளிவுபெறும். கணவன் - மனைவி இடையே பிரச்சினைகளும் இல்லாமல் போகும்.

# தாய் - சேய் உடல்நலக் குறிப்புகள்

தாய்ப்பால் பருகும் குழந்தைக்கு தோல்நோய்கள் எதுவுமே வருவதில்லை. தாய்ப்பாலை நிறுத்திவிட்டு, பாசுப்பாலோ அல்லது வேறு உணவோ கொடுக்க ஆரம்பித்ததும், குழந்தைகளுக்குத் தோல் நோய் வர ஆரம்பிக்கிறது.

கர்ப்பமாக இருக்கும்போது, பெண்கள் அம்மைப்பால் குத்திக்கொள்ளக்கூடாது. அம்மைப்பால் ஏற்றினால், வயிற்றிலுள்ள பிள்ளைக்கு, ஏதாவது ஆபத்து ஏற்படலாம்.



கருத்தரித்த பெண்கள் அடிக்கடி பழரசம் பருகவேண்டும். பழரசம் பருகுவதால், குழந்தைக்கும், தாய்க்கும் தேவையான சத்துக் கிடைக்கும். செயற்கை விற்றமின் களைவிட பழரசம் சிறந்தது.

கர்பமாக இருக்கும்போது, பெண்கள் தினமும் கொஞ்சநேரம் ஓய்வாக மல்லாந்து படுத்துக் கொண்டு, மூச்சை மெல்ல உள்ளே இழுத்து, வெளியே விடவேண்டும். இப்படியே தினமும் பல தடவை மூச்சை நன்றாக இழுத்து விட்டால், பிரசவத்தின்போது, வேதனை எதுவும் இல்லாமல் சுலபமாகக் குழந்தை பெறமுடியும்.

பெண்கள் தங்கள் உடம்பு பருக்க ஆரம்பித்தால், உடனே அதனைக் கவனிக்கவேண்டும். அதற்கு மருத்துவ ஆலோசனை பெறவேண்டும்.

ஏன் என்றால், பெரும்பாலான பெண்களுக்குக் கர்ப்பப்பை கோளாறினால்தான் உடல் பருக்க ஆரம்பிக்கிறது.

கர்ப்பமாகவுள்ள பெண்கள் ஆரோக்கியமாகவும், நல்ல பலசாலியாகவும் இருந்தாலும்கூட, வயிற்றில் வளரும் குழந்தை பலம் பெறச் சத்துள்ள உணவுகளையும் சாப்பிடவேண்டும். இல்லாவிட்டால், பிறக்கும் குழந்தை ஆரோக்கியமாக இருக்காது.

பிறந்த குழந்தைகளை வெளிச்சமான இடங்களில் படுக்க வைக்கவேண்டும். வெளிச்சம் குறைவான இடங்களில் இருக்கும் பிள்ளைகளுக்கு மஞ்சள்காமாலை வருகிறது.

# வல்லமை தாராயோ...?

வீணையொன்று எவருமே தேடாமல் வீணே கிடக்கிறது. அது சாதாரண வீணையல்ல. நல்ல வீணை கவனிப்பாரற்று, தூசி படர்ந்து, அதனால் அதன் நல்ல தன்மை கெட்டு, புழுதியில் எறியப்பட்டு கிடக்கிறது.

அப்படிக் கிடக்கலாமா? அதனை எறிய விட்டிருக்கலாமா?

சங்கீதம் பற்றி அறிந்த எவருமே அப்படிவிட விரும்பமாட்டார்கள். வீணைக்கும் அதன் சக்தியைப் பிரயோகிக்கத் தெரியவில்லை அதை இன்னிசை எழுப்புமாறு மீடக வீணை வித்துவான் ஒருவன் தேவைப்பட்டான்.

வீணையை வைத்திருந்தவருக்கும், அதன் சிறந்தபயன் புரியவில்லை, அதை மீட்டவும் தெரியவில்லை. அவர் அதைப் புழுதியில் எறிந்துவிட்டார்.

இன்று நம்மில் பலரும் இந்த வீணைபோலவே கிடக்கிறோம். எமது திறமையும், சக்தியும் எமக்குத் தெரியாதிருக்கிறது. அவற்றை அறியாது இந்த அருமந்த பிறவியினை வீணாக்குகிறோம்.

நல்லதோர் வீணை செய்தே அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே


என்று பாரதி - சிவசக்தியை நோககிப் பாடினான்.

இந்த நவராத்திரி காலத்தில் நாமும் சக்தியை நோக்கி இதே வரத்தைத்தான் கேட்கவேண்டும்.

பாரதியை மட்டுமல்ல, எம்மையும சுடர்மிகும் அறிவுடன்தான் இறைவன் படைத்திருக்கிறான்.

"நான் எட்டாம் வகுப்பிற்குப் பின்னர் படிக்கவில்லை. என்னுடைய அறிவு போதாது" என்றோ, "நான் பரீட்சையில் சித்தியடையவில்லையே, பல்கலைக்கழகத்துக்கு செல்ல முடியவில்லையே, எனக்குத் திறமையே கிடையாது" என்றோ நீங்கள் நினைத்திருக்கலாம்.

ஆனால், உங்களால் அழகாகச் சித்திரம் வரைய, சிறப்பாக விவசாயம் செய்ய இயலுமாக இருக்கும். அவையெல்லாம் சுடர்விடும் அறிவுதான்.



வீணையைப்போல உங்கள் திறமையைப் புரிந்துகொள்ளாமல் நீங்கள் இருக்கலாமா? இந்த உலகையே இயங்க வைக்கும் சக்தியை நவராத்திரி காலத்தில் விரதம் அனுஷ்டித்து, வழிபாடு செய்கிறோம்.

அப்படி வழிபடும்போது, பாரதியைப் போன்று நாமும் வரங் கேட்கவேண்டும்.

"என்னைத் திறமையுடன் படைத்த தாயே, என்னை வீணாக்கிவிடாதே. இந்த உலகம் பயன்பெறுமாறு வாழ எனக்கு வல்லமையை - சக்தியை தந்தருளம்மா" என்று வரங்கேட்டால், அவள் அதனை நிச்சயம் தந்து விடுவாள்.

வீரமாகிய சக்தியைத் துர்க்கையாகவும், செல்வமாகிய சக்தியை இலக்குமியாகவும், கல்வியாகிய சக்தியைச் சரஸ்வதியாகவும் கண்டு, ஒன்பது இரவுகள் வழிபடுகிறோம்.

ஒரு நாளும் தளர்வறியா மனமும், தனமும், கல்வியும் அன்னை நல்குவாள் என்பது திண்ணம். அவற்றால் என்ன பயன்?

புலை அச்சம் போய்யகல வேண்டும். இந்த நாட்டோர் கீர்த்தி எங்குமோங்கக் கலிசாடும் திறனை நாம் பெறவேண்டும்.

இல்லையென்ற கொடுமை உலகில் இல்லையெனச் செய்ய வேண்டும்.

தொட்டனைத்தூறும் மணற்கேணிபோல், அள்ளி வழங்க வழங்க வளரும்.

கல்விச் செலவத்தை ஏழைகளுக்கும் வழங்கவேண்டும். அன்னசத்திரங்களும், ஆலயங்களும் கட்டும் புண்ணியம் - ஓர் ஏழைக்குக் கல்வியறிவை வழங்குவதால் வரும். எனவே, அவர்களுக்குக் கல்விச் செல்வத்தை வாரிவழங்க வேண்டும. ஆற்றலும், செல்வமும், கல்வியும் பெற்று இவ்வாறு பயனுற வாழ்வதற்காக இந்த நவரத்திரி காலத்தில் நாம் -

"சிவசக்தி வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே" என வரம் கேட்டு, அதன் மூலம் இந்த உலகம் சிறக்கவும், பயன் பெறவும் வாழ்வோமாக.

- யோகேஸ்வரி சிவப்பிரகாசம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*செயற்பால செய்யாது இவறியான் செல்வம்*
*உயற்பாலது அன்றிக் கெடும்*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# பலகோடி டொலர் பெறுமதியான கேள்வி

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குரிய அனுகு முறைகள் குறித்து, இன்னமும் ஒரு தீர்க்கமான முடிவு எட்டப்படாத நிலை தொடர்வதற்கு சிறிலங்காவின் ஆளும் அரசுக்கும், பிரதான எதிர்க்கட்சிகளுக்குமிடையே சமாதான நகர்வுகள் குறித்து, முரண்பாடான கொள்கைகளும் - கருத்துக்களும் நிரந்தரமாக நிலவிவருவதே காரணமாகும்.

தமிழ்மக்களின் உரிமை தொடர்பான விவகாரங்களில் சிறிலங்காவின் பெரும்பாலான சிங்களக் கட்சிகளும், அவற்றின் தலைமைகளும் காலங்காலமாக ஒரே விதமான, பேரினவாதச் சிந்தனைகளின்பாற்பட்ட, கருத்தியல் கோட்பாடுகளையே கொள்கைகளாக வரித்துக் கொண்டபோதிலும், வெளிப்படையாக இரு நிலை நோக்கினையே இனங்காட்டி வந்துள்ளனர்.

ஆளும் கட்சி சமாதானம் பேசினால், எதிர்க்கட்சி அதனை எதிர்க்கும். எதிர்க்கட்சி சமாதானம் பேசினால், ஆளும் கட்சி அதனை எதிர்க்கும். இரு தரப்பினருமே தத்தம் நிலைப்பாட்டிற்கேற்ப நியாயங்களை வகுத்து, வரையறுத்துக் காரணங் காட்டிக் கொள்வார்கள். அதனைப் பரந்தளவில் மக்கள் மத்தியிலும், சர்வதேச மட்டத்திலும் பிரசாரமும் செய்து கொள்வார்கள்.

இதுவொரு முடிவற்று நீளும் வரலாறாகவே நீண்டு வருவதால், சிறிலங்காவின் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளும், அர்த்தமற்ற, நம்பிக்கையற்ற காலத்தை வீணடிக்கும் அல்லது காலங்கடத்தும் நடவடிக்கைகளாகவே உணரப்பட்டு வருகின்றது.

இவை தெரிந்தே செய்யப்படும் திட்டமிட்ட அரசியல் நோக்கங்களைக் கொண்ட நடவடிக்கைகளேயாகும்.

ஆளும்கட்சி - எதிர்க்கட்சியானாலும், எதிர்க்கட்சி- ஆளும்கட்சியானாலும் சமாதானத்தை அவை சத்திய நோக்குடன், நியாயபூர்வமான உறுதியுடன் அனுகியதே கிடையாது.

ஆரம்பகாலத்தில் அவர்களுக்கு இதுவொரு சுலபமான வேலையாகத்தென்பட்டதற்கு அப்போதைய தமிழ்த் தலைமைகளின் மிதவாத குணாம்சமும், பதவி வெறியும் காரணமாக அமைந்தது.

அவர்களின் உரிமைகளை யாசித்துப் பெறும், சலுகைகளுக்காகக்கூடக் கையேந்தும் - ஒருவரையொருவர் காட்டிக் கொடுக்கும் - பேரினவாதிகள் உரிமைகளைத் தருவார்கள் எனத் தமிழ்மக்களை நம்பவைத்து அரசியல் வியாபாரம் நடத்தும் - பதவியுணர்வு மட்டும் கொண்ட குணாம்சத்தை சிங்களத் தலைமைகள் மிகவும் சாதுரியமாகப் பயன்படுத்திக் கொண்டன.

இன்று காலம் மாறிவிட்டது. அரசியல் சூழலை யுத்தகள நிலவரங்கள் வெகுவாக மாற்றிவிட்டது. மிதவாதிகள், சுதந்திர வேட்கையும், விடுதலையுணர்வும் கொண்ட அனைத்தையும் போராடிப் பெறும் வலுவாற்றல் கொண்ட, இளைஞர்களின் பின்னால் அவர்களின் அடிதொடர்ந்து அரசியல் நகர்வுகளை மேற்கொள்ள வேண்டிய காலகட்டத்திற்குத் தமிழ்மக்களின் அரசியல் திருப்பம் கண்டுள்ளது.

ஒருகாலத்தில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா - தமிழ் தலைமைகளின் போட்டி, பொறாமை மனப்போக்கை மனதிற்கொண்டு ஒற்றுமையாக வாருங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்று கூறியது நினைவுக்கு வருகிறது.

அது சாத்தியமற்றது என்பதை நன்குணர்ந்து கொண்டே- அந்த நம்பிக்கையிலேயே அவர் அவ்வாறு கூறியிருந்தார்.

இன்று நிலை அப்படியல்ல. அரசாங்கமும், எதிர்க்கட்சிகளும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண, அதிகாரப் பரவலாக்கல் மற்றும் இடைக்கால நிர்வாகம் தொடர்பான விடயங்களில் பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் எனத் தமிழர் தரப்பு மட்டுமல்ல சர்வதேச அமைப்புகளே அழுத்தம் கொடுக்க ஆரம்பித்துள்ளன.


கடைசியாக இத்தகையதோர் கோரிக்கையைச் சற்று அழுத்தமாகவே வெளியிட்டிருப்பவர், உலகவங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியான பீற்றர் ஹேரால்ட் ஆவார்.

இது தற்போதைய தமிழர் தலைமைக்குக் கிடைத்துள்ள ஒரு வெற்றியேயாகும்.

ஆளும்கட்சியும், எதிர்க்கட்சியும் தேசியப் பிரச்சினைகளில், பொதுவாக இணைந்து தீர்வுகாண வேண்டிய சிக்கலான - மிக அவசிய, அவசரமான பிரச்சினைகளில் இணைந்து செயற்படாது, ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படுவது நாட்டிற்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்துவதுடன், உருப்படியான ஆட்சிக்கும் வழிவகுக்கப் போவதில்லை. கட்சி அரசியல் தீர்க்கப்படாமல், சமாதானம் ஏற்படப்போவதுமில்லை எனவும் அவர் கூறியிருப்பது அரசுக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் ஒரு இடித்துரைப்பு நடவடிக்கையாகவே இருக்கும். இதுவரை சாத்தியமாகாத, இனிமேலும் சாத்தியமாகும், சாத்தியமற்ற ஒரு விடயத்தை சாத்தியமாக்க வேண்டும் என்றே உலகவங்கியின் பிரதிநிதி பீற்றர் ஹேரால்ட் சமாதானத்தின் பேரால் வலியுறுத்தியுள்ளார்.

ஆனால், முரண்பாடுகளுள் முட்டிமோதிக் கொண்டிருப்பதில் அரசியல் சுகம் காணும் பிரதமரும், ஜனாதிபதியும் அதனைப் புரிந்துகொண்டு தேசாபிமான உணர்வுடன் - சர்வதேசத்தின் குரலுக்கு மதிப்பளித்து, உலவங்கி வதிவிடப் பிரதிநிதியின் கோரிக்கையைச் சாதகமாகப் பரிசிலீப்பார்களா என்பது தான் 'பலகோடி டொலர்' பெறுமதியான கேள்வியாகும்.

## நாடும் நடப்பும்




# உடற்கல்வி பட்டதாரிகள் அரச அதிபருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

இரண்டாயிரமாம் ஆண்டு அமைச்சரவையில் - உடற்கல்வி ஆசிரியர்களின் வெற்றிடத்திற்கு உயர்கல்வி டிப்ளோமா பட்டதாரிகளை முன்னுரிமை அடிப்படையில் ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டும், இதுவரை நியமனம் வழங்கப்படவில்லை. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி, நியமனம் வழங்குவதற்கு அரச அதிபரை நடவடிக்கை எடுக்குமாறு யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கம் அரச அதிபரிடம் கோரியுள்ளது.

யாழ். பல்லைக்கழகத்தில் 1998 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 2 வருடங்களைக் கொண்ட உடற்கல்வி கற்கை நெறியானது, 3 அணிகளை இதுவரையில் வெளியேற்றி உள்ளது. அத்துடன், 2 அணிகளை உள்வாங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதில் வெளியேறிய 135 மாணவர்களும் எதுவித வேலை வாய்ப்பும் இன்றி கீழ் உழைப்பில் உள்ளனர். வடக்கு-கிழக்கில் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை இருந்தபோதும், எம்மை உள்வாங்குவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, எமக்கு ஆசிரிய நியமனத்தைப் பெற்றுத்தருவதற்கு ஆவண செய்யுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இதுவரையில் பலருடன் சந்திப்புகளை மேற்கொண்டும், எதுவிதமான, திருப்தி அளிக்கக்கூடிய எந்த .நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

2000 ஆம் ஆண்டு அமைச்சரவையில் உடற்கல்வி ஆசிரியர்களின் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு, உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஆசிரிய நியமனம் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆயினும் இதுவரையில் எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளப்படவில்லை.

ஆசிரிய சங்கத்திடம் தொடர்பு கொண்டபோது, அவர்கள் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கிற்கு எமது நிலையை எடுத்துக்கூறிய போது, அவர் எமக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுத்தருவதாக உறுதி வழங்கினார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோவை, இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரன் மூலம் யாழ்.பல்கலைக்கழகத்தில் சந்தித்தபோது, எமது உடற்கல்வி மாணவர்களை ஆசிரிய நியமனத்தில் உள்வாங்குவதாக உறுதியளித்தார்.

என்.எ.ரி.இ.அமைப்பை, துணைவேந்தர் சகிதம் சந்தித்தபோது, அவர்கள் உடற்கல்வி டிப்ளோமாதாரிகளை கவனத்தில் கொண்டு, அவர்களை ஆசிரிய நியமனத்தில் உள்வாங்குவதாக உறுதியளித்தனர்.

இதுபற்றி கூட்டமைப்பு கல்விசார் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவைச் சந்தித்தபோது, அவர் எமது விடயம் பற்றி மாகாண அமைச்சுடன் தொடர்புகொண்டு தெரியப்படுத்தினார். ஆனாலும், இதுவரையில் மாகாண அமைச்சிடமிருந்து எதுவித பதிலும் வரவில்லை.

இவ்வாறு, பலர் எமக்கு பல வாக்குறுதிகளை தந்தபோதும் அதற்கேற்ப எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்வில்லை என்பது எமக்குக் கவலையளிக்கும் விடயமாகும்.

தமிழீழ கல்விக்கழக பொறுப்பாளர், துணைப்பொறுப்பாளர், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர், யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ஆகியோரைச் சந்தித்தபோது, அவர்கள் எமது வேலைவாய்ப்புத் தொடர்பாக கூடிய கவனம் செலுத்துவதாக கூறியுள்ளனர்.

எனவே, இது விடயத்தில் தாங்களும் எங்களின் நலன்கருதி கூடிய கவனம் எடுத்து எமக்குரிய வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருவதற்கு ஆவண செய்யுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ச,ய,இ)

# அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளுக்காக தொழிற்சங்கங்களின் ஆதரவைப்பெற நடவடிக்கை

## சரத் அமுனுகம தலைமையில் குழு நியமனம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி நடத்தவுள்ள - அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளிலும், ஆர்ப்பாட்ட பேரணிகளிலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆதரவான தொழிற்சங்கங்களின் ஒத்துழைப்பை பெறுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க - சரத் அமுனுகமவின் தலைமையில் ஒரு குழுவை நியமித்துள்ளார்.

இந்தக்குழு கடந்தவாரம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் ஒன்றுகூடி ஆராய்ந்துள்ளது. அரச, தனியார், அரசசார்பற்ற நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களைச் சந்தித்து பேரணி சம்பந்தமாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கப்போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

இந்த மாதத்தில் நடைபெற இருக்கும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில், பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களை கொழும்புக்கு அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்கு மாகாண ஆளுநர் அலவி மௌலானா, நாடாளுமன்ற உறுப்பினர் அத்தாவுட செனவிரத்ன, சந்தன களுவாராட்சி ஆகிய தொழிற்சங்கத் தலைவர்கள் இந்தக் கலந்துரையாடல்களில் பங்கேற்க இருக்கின்றனர்.

# ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கு எதிராக போராட்டம்

(கொழும்பு)

ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரை, தற்காலிகமாக பதவியிலிருந்து நீக்க, விசாரணை நடத்த வேண்டும் எனக்கோரி பல்கலைக்கழக மாணவர்களின ஆணைக்குழு முன்பாக நேற்று மறியல் போராட்டம் நடைபெற்றது.

அண்மையில் பல்கலைக்கழகத்தில் அரசியல் கட்சி ஒன்றுடன் தொடர்புடைய மாணவர்குழுவுக்கும், கட்சி சாராத மாணவர்குழு ஒன்றுக்கும் இடையில் மோதல் சம்பவம் நடைபெற்றது. இந்தச் சம்பவத்தில் 10 இற்கு மேற்பட்ட மாணவர்கள் காயமடைந்து வைததியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்த சம்பவத்துடன் பல்கலைக்கழக துணைவேந்தர் வி.கே.எப்பிட்ட வத்த தொடர்புடையவர் என, மாணவர்கள் குற்றஞ்சாட்டி, அவர் வகித்துவரும் துணைவேந்தர் பதவியை தற்காலிகமாக நிறுத்தி அவரிடம் இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் என்றும், விசாரணையில் அவர் வழங்கும் வாக்குறுதி மூலத்தின் ஒரு பிரதியை தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

தமது இந்தக் கோரிக்கையை துரிதப்படுத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(01)

# தமது பன்றியைத் தேடி அலையும் மண்கும்பான் கடற்படையினர்!

(மண்கும்பான்)

கடந்த மூன்று நாட்களாக, மண்கும்பானில் கடற்படையினர் பன்றியைத் தேடி அலைவதாகக் கூறப்படுகிறது.

கடற்படையினரால் வளர்க்கப்பட்டு வந்த பன்றியொன்று, கடந்த மூன்று நாட்களாக காணாமற்போயுள்ளதையடுத்து, கடற்படையினர் ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று தேடி வருவதாகவும். இந்நடவடிக்கையினால் அப்பகுதி மக்கள் பெரிதும் பீதியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பன்றியைத் தேடிவரும் கடற்படையினர் அரைகுறைத் தமிழில் கதைப்பது தமக்குப் புரியவில்லை எனவும், தாங்கள் இவ்வாறானதொரு பன்றியை ஒருபோதும் காணவில்லையெனவும் மக்கள் தெரிவித்தனர்.

(53)

# இந்த வார பலன்கள்

## 03.10..2003 ~09.10.2003 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சனி |
| செவ் யுரே | 03 ப.1.39 கன் - புதன்<br>03 பி.இ. 2.56 மக - சந்<br>04 பி.இ. 3.12 துல- சுக்<br>06 கா. 9.04 கும் - சந்<br>08 மா. 5.25 மீன - சந் | | |
| நெப் | | | குரு புதன் |
| சந் | | கேது | சூரி, சுக் |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



இந்த ராசியிற் பிறந்தவர்களுக்கு மனச்சோர்வும், ஊக்கமின்மையும் காணப்படும். தொடங்கும் கருமங்கள் அனுகூலமாவதில் தாமதம் காணப்படும். பிரயாசை, அலைச்சல் என்பன கூடுதலாக இருக்கும். குடும்பத்தில் கருத்து வேற்றுமைகளும், சச்சரவுகளும் தோன்றலாம். அமைதியைக் கைக்கொள்வதால் யாவற்றையும் சமாளிக்கமுடியும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானந்தேவை. பிள்ளைகளால் உதவி கிடையாது. உத்தியோகத்தர்களுக்குப் பல வகைகளாலும் சிரமங்கள் தோன்றும். திருமண கருமங்கள் தாமதமடையும். வியாபாரிகளுக்கு வருவாய் குறைவாகவே இருக்கும். பிரயாணங்கள் அதிகமாகும். மாணவர்கள், தமது கல்வியைத் தொடரப் பல சிக்கல்கள் தோன்றும்.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதம், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இவர்களுக்கு மனத்திடமும், ஊக்கமும் இருக்கும். எக்கருமத்தையும் சலிக்காமல் சாதிப்பர். செய்யும் கருமங்கள் நன்கு பலிதமாகும். குடும்பத்தில் திருப்தியும், மன நம்பிக்கையும் ஏற்படும். வீட்டில் இனத்தவர்களுடைய வருகை அதிகமாகும். சுபகருமங்களும் நடக்கும். நண்பர்களால் உதவி உண்டு. திருமணம் நடக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படும். உத்தியோகம் செய்பவர்களுக்குப் புதிய இடமாற்றம் அல்லது தொழில் மாற்றம் ஏற்படினும், அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுத் திறம்பட நடாத்துவர். வியாபாரிகளுக்குப் பழைய முதலீடுகள் நல்லவிலைபோகும். வியாபாரம் சம்பந்தமான பிரயாணங்களும் ஏற்படும். மாணவர் ஊக்கத்துடன் செயற்பட்டு முன்னேற்றம் பெறுவர்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



இந்த ராசியினர் உற்சாகத்துடன் எக்கருமத்தையும் நிறைவேற்றுவர். மனத்திடம், தேகாரோக்கியம் நன்கு அமைந்திருக்கும். பிள்ளைகளிடத்திலும், இனசன பந்துக்களிடமும் ஒற்றுமை வலுக்கும். கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகள் இருப்பின், அவை நீங்கும். அடிக்கடி பிரயாணம் மேற்கொள்ள வேண்டிவரும். திருமணத்துக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். புதுத்தொழில்களை எதிர்பார்த்திருப்பவர்களுக்கும் நற்பலன் கிட்டும். உத்தியோகத்தர்கள் தமது கருமங்களைச் சிறப்பாகச் செய்து, மேலதிகாரிகளின் நன்மதிப்பைப் பெறுவர். வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்குத் தொழில் சிறப்பாக நடந்து, பணம் சேரும். மாணவர்கள் உற்சாகமாகத் தமது கருமங்களை மேற்கொள்வர்.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*

இவர்களுக்குத் தமது தொழிலில் சிரத்தை குறைவாக இருக்கும். தேவையற்ற விடயங்களில் தலையிட்டு சிரமங்களைத்தேடிக் கொள்வர். அயலவர்களுடன் கருத்து வேற்றுமையும், சச்சரவுகளும் ஏற்படலாம். தேக



சுகக்குறைவினால், வைத்தியச் செலவு அதிகமாகும். குடும்பத்திலும் மகிழ்ச்சி குறைவாகவே இருக்கும். செலவுகளும் வரவுக்கு மீறிக்காணப்படும். பிரயாணங்களினால் பொருள் நஷ்டம் காட்டும். திருமணத்தை எதிர்நோக்குவோருக்குக் காலதாமதம் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். சக உத்தியோகத்தர்களின் உதவி கிடையாது. வியாபாரிகளுக்கு வருவாய் குறைவாகவே இருக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. மாணவர்களுக்குச் சோம்பல் தன்மை அதிகமாகக் காணப்படும்.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம)*

இந்த ராசியிற் பிறந்தவர்களுக்கு எடுக்கும் முயற் சிகள் தோல்வியிலேயே முடியும். வீண்



மனஸ்தாபங்களும், சச்சரகளும் தொடரும். தேகசுகம், குடும்பசுகம் இடையிடையே பாதிக் கப்படலாம். மருத்துவச் செலவுகளும் அதிகமாகும். கடன் தொல்லைகளும் தலைதூக்கும். பிறநாட்டிலிருந்து உதவிகள் வருவது தாமதமாகும். காணி சம்பந்தமான வழக்குகளும் சிலருக்கு ஏற்படும். மணவாழ்க்கையை எதிர் பார்த்திருப்போருக்கு ஏமாற்றமே கிட்டும். உத்தியோகத்தர்களுக்குத் தமது கருமத்தில் வெறுப்புணர்ச்சி தோன்றலாம். வியாபாரிகளுக்கு இலாபம் குறைவாகவே இருக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் சலிப்புத்தொடும்.

### கன்னி

*(உத்தரம் 2, 3 4 ஆம் பாதங்கள, அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*

இவர்கள் ஊக்கத்துடன் தமது தொழில்களைச் செயவர். தொடங்கும் கருமங்கள்



இலகுவில் அனுகூலமாகும். நிறைந்த வருவாய் கிட்டும். வீட்டில் உற்சாகத்துக்கு குறைவிருக்காது விருந்தினர்களின் வருகை அதிகரிக்கும். புதிய பொருட்களை வாங்கிச் சேர்ப்பதில் ஆவலுடையவராகக் காணப்படுவர். தேகசுகம் பாதிப்படையாது, உற்சாகமாக இருக்கும். பொதுக்கருமங்களிலும் அதிக ஈடுபாடு காணும். பலருடைய நன்மதிப்பைப் பெறக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. புதுவாழ்க்கையின் இணையப் போகும் சகோதர சகோதரிகளுக்கு மகிழ்ச்சியுடன் கருமம் ஒப்பேறும். உத்தியோகத்திலுள்ளவர்கள் ஊக்கமாகத் தொழில் செய்து, பலரின் பாராட்டைப் பெறுவர். வியாபாரிகளுக்குத் தொழில் ஓகோ என்று நற்பலன் கொடுக்கும். மாணவர்கள் முயற்சியால் பாராட்டப்படுவர்.

### துலாம்

*(சித்திரை 3,4ஆம் பாதங்கள, சுவாதி விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்)*

இந்த இராசியினருக்குத் தொழினால் நல்ல முன்னேற்றம் கிட்டும். காணி, பூமி வருமானங்கள் அதிகமாகும். இனத்தவர்களாலும், பிள்ளைகளாலும் நன்மை உண்டு. தேகசுகம் நன்றாக அமையும். கொடுக்கல் வாங்கல் பிணக்குகள் தீரும். வீட்டில் மங்கல நிகழ்வுகள்



திருப்திதரும். வீண் செலவுகளைத் தவிர்த்துக் கொள்ளுதல் நன்று. பிரயாணங்களில் அதிக அனுபவங்களைப் பெற்றுக்கொள்வர். உத்தியோகத்தவர்கள் பல நன்மைகளைப் பெறக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. வியா பாரிகளுக்குத் தேங்கிக் கிடந்த முதலீடுகள் விற்பனையாகும். பணம் சேரும். மாணவர்கள் மகிழ்ச்சியுடன் கல்வியில் ஈடுபடுவர்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுசுஷம், கேட்டை)*

விருச்சிகராசியிற் பிறந்தவர்களுக்கு நற்பலன் குறைவாகவே இருக்கிறது. தொழில் துறை மந்தநிலையிலேயே இருக்கும். மனச்சோர்வும், விரகதியும் தோன்றும். தொடஙகும்



கருமங்கள் கைகூடுவதில், தாமதம் உண்டாகும். மனக்கவலைகளால் தேகாரோக்கியம் குன்றும். குடும்பத்திலும் மகிழ்ச்சி குறைவாகவே இருக்கும். கொடுக்கல் வாங்கல்களில் பிணக்குகள் தோன்றும். பணச் செலவுகளும் அதிகமாகும். வெளிநாட்டுப் பிரயாணங்களை எதிர்நோக்குவோர் ஏமாற்றப்படுவர். இனத்தவர்களின் உதவிகள் கிடைக்காமற் போகலாம். மங்கல வாழ்வை எதிர்நோக்குவோருக்கும் காலதாமதம் காட்டும். உத்தியோகம் புரிவோருக்கு வேலைப்பளு அதிகமாகும். மேலதிகாரிகளின் வெறுப்புகளுக்கு ஆளாக வேண்டியிருக்கும். வியாபாரிகளுக்கும் முதலீடுகள் தேங்கிக்கிடக்கும். லாபம் குறைவாகவே இருக்கும். மாணவர்கள் விளையாட்டில் கூடியகவனம் செலுத்துவர்.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*

இவர்களுக்குப் பொதுவாக நடுத்தர பலன்களே காட்டுகின்றது. செய் தொழிலில்



மட்டுப்படுத்தப்பட்ட லாபமே காட்டும். தேகநிலை, குடும்ப நிலையில் இடையிடையே சுகக்குறைவுகள் காட்டும். எனினும், பெரிய செலவினங்கள் ஏற்படாது. எவற்றையும் சமாளிக்கக்கூடிய மனப்பாங்கு இருக்கும். பிரயாணங்கள் தாமதத்தின் மேல் கைகூடும். திருமண வாய்ப்புகள் அமைவதில் இழுபறிநிலை காணும். உத்தியோகம் புரிவோர் தமக்கு முன்னேற்றம், உயர்ச்சி கிடைக்கவில்லையென ஆதங்கப்படுவர். மாணவர்கள் வெகுசிரமத்தின் மத்தியில் தமது கல்வியைத் தொடர நேரும்.

### மகரம்



*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*

மகரராசிக்காரருக் செய்தொழிலில் முன்னேற்றத்தையும், வருவாயையும் காணலாம். உறவினர்களால் நன்மை ஏற்பட இடமுண்டு. தொழில் முயற்சிகளால் நல்ல வருமானம் கிடடும். தேக சௌக்கியம் நன்றாக இருக்கும். வெளிநாட்டிலிருந்து உறவினர்கள் வருகை தருவார்கள். வீட்டில் மகிழ்ச்சியும் குதூகலமும் ஏற்படும். நண்பர்களாலும், பிள்ளைகளாலும் நன்மை உண்டு. பிரயாணங்களைக் கூடுதலாக மேற்கொள்ள வேண்டியிருக்கும். கூடுதலாக சமூகக் கைங்கரியங்களிலும் ஈடுபடுவார்கள். உத்தியோகததுறையிலுள்ளோர் நமது கருமங்களைச் செவ்வனே நடாத்தி நன்மதிப்பைப் பெறுவர். வியாபாரிகளுக்குத் தேங்கியிருக்கும் சரக்குகள் நல்ல விலை போகும். மாணவர்கள் கல்வித்துறையில் கூடிய கவனஞ்செலுத்துவர்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள, சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்)*

இவர்களுக்குச் செய்தொழிலில் லாபமும் செல்வாக்கும் மிகும். தேகரோக்கியமும் முகமலர்ச்சியும் காணப்படும். இல்லங்களில் சுபகருமங்கள் ஏற்படலாம். புதுப்பொருட்களைக் கொள்வனவு செய்வதில் கூடுதலாக ஈடுபடுவர். கடன் தொல்லைகள் இருந்தால் விரைவில் நீங்கும். இல்லறத்தில் இணைய விரும்புவோருக்குச் சாதகமான காலமாக அமையும். நண்பர்கள் ஒத்தாசை புரிவார்கள். உத்தியோகத்துறையினர் முன்னேற்றத்தையும்,



கௌரவத்தையும், நன்மதிப்பையும் பெறலாம். வியாபாரிகளுக்கு வியாபாரம் சிறப்பாக நடப்பதால், நிறையப் பணம்சேரும். புது முதலீடுகளையும் ஆரம்பிக்கலாம். மாணவர்கள் திறமையை வெளிப்படுத்தி பரிசில்களைப் பெறுவர்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம் உத்தராட்டாதி, ரேவதி)*

மீனராசியினர் தமது அன்றாடத் தொழில்



களை மிகுந்த சலிப்புடனேயே செய்வர். இடையிடையே மனச்சோர்வு தென்படும். செலவுகள் கட்டுக் கடங்காமல் போகும். தேகசுகம், குடும்பசுகம் பாதிப்படைவதால் வைத்தியச் செலவுகளும் அதிகமாகும். இனத்தவர்களிடையே சச்சரவுகள் ஏற்படலாம். பிள்ளைகளால் உதவி கிடையாது. திருமண வாழ்க்கையை எதிர்பார்த்திருப்போருக்குக் கால்தாமதம் ஏற்படும். உத்தியோகத்தர்கள் மனவிரகத்தியுடன் கரும மாற்றவேண்டியிருக்கும். புதிதாக உத்தியோகம் பெறவிரும்புவோர், பொறுத்திருந்து செயற்படவேண்டும். வியாபாரிகளுக்குப் புதிய முதலீடுகளால் லாபம் குறைவாகவே பெறவேண்டியிருக்கும். மாணவர்கள் தமது கல்வியில் அதிக அக்கறை கொள்ளமாட்டார்கள்.

---

# நாளிதழ்களின் கடமை செய்திகளை: பின்புலத்தில் செவ்வியாக வழங்குதலே

**நமது ஈழநாடு பத்திரிகையின் ஓராண்டு நிறைவையொட்டி பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் அனுப்பிவைத்த வழித்தட மேற்செல்லல் பற்றிய ஒரு குறிப்பு...**

ஈழத்தில் அச்சு ஊடகத்தின், குறிப்பாக செய்தி இதழ்களின் இன்றைய நிலை பற்றிச் சற்றுச் சிந்தித்தல் பலன் தரும் ஒரு முயற்சியாகும்.

கடந்த ஒரு மாதகாலமாகச் சிங்கள நாளிதழ்களில் தரப்படும் அன்றாட தலையங்கங்களைப் பார்க்கும்போது, ஏறத்தாழ 1/3 காலப் பகுதியில் அவர்கள் இனப்பிரச்சினை, சமாதானம் ஆகியன சாராத வேறு பல செய்திகளையும், பிரதான செய்தியாகத் தந்துள்ளமை தெரியவருகின்றது. அறுவடை, நெல்விற்பனை, சுகாதாரத் துறையினரின் வேலை நிறுத்தம் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றியும் அவர்கள் பிரதான தலையங்கங்களாக வழங்க வேண்டியிருந்தது. அதேவேளை, தமிழ் நாளிதழ்களைப் பார்க்கும்போது, எல்லா நாள்களிலும் சமாதானம், புனர்வாழ்வு, இவற்றுக்கான உதவிகள் பற்றிய விடயங்களே தலையங்கங்களாக இருந்தன. இது நமது இருப்புப் பற்றிய ஒரு முக்கிய உண்மையை உணர்த்துகின்றது. அதாவது, போர் வழிப்பிரச்சினைகளே ஈழத்தமிழரான நமக்குப் பிரதானமானவை.

செய்தி இதழியலைப் பொறுத்தவரையில்- ஒரு முக்கியமான வினாவை, செய்தி இதழ்கள் ஒவ்வொன்றும் எத்தகைய உணர்முறைமைகளை, அதன் வாசகரிடத்தே தோற்றுவிக்கின்றன என்பதுதான். அந்த அடிப் படையில்தான், செய்தி இதழ்கள் - தங்கள் தனித்துவத்தை உண்டாக்கிக் கொள்ளும். செய்தியைத் தெரிவிப்பது என்பது, தன்னுள்தான் முடிந்த ஒரு விடயமல்ல. அந்தத் தெரிவிப்பின் (Reporting) ஊடேயே ஒரு அபிப்பிராய உருவாக்கமும் வந்துவிடும். அதற்கு மேல் செய்திகளை எத்தகைய பின்புலத்தில் வைத்து வாசகர் நோக்க வேண்டும் என்பது பற்றிய தெளிவும், நாளிதழை மற்றவற்றினின்று வித்தியாசப்படுத்தும். இக்கடடத்தில்தான், செய்தி இதழ் என்பது செய்தி தெரிவிப்புக்கு அப்பால் போய், ஆக்கபூர்வமான சமூகப்பணி செய்யவேண்டுவதாகும். துரதிஷ்டவசமாக நமது பிரசுரச் சூழல், வள இருப்புக்கள், பொருளியல்நிலை காரணமாக, ஒரு செய்தி இதழின் பூரணமான பணியையும் நிறைவுறச் செய்வதற்கான வாய்ப்புக்கள் இல்லாதிருந்து வந்துள்ளது.



இப்பொழுதும் எல்லா வளமும் கிட்டிவிடவில்லை. ஆனால், இப்பொழுது நமது பணிகளை, மிக்கபொறுப்புடன் மாத்திரமல்லாது, பணி பற்றிய தெளிவுணர்வுடனும், இலக்குத் திட்டத்துடனும், தொழிற்பட வேண்டிய காலம் வந்துள்ளது.

நாளிதழின் பிரசுரநிலைப் பொறுப்பாளரை (Edi- tor) ஆசிரியர் என்று கூறும் வழக்கம் நம்மிடையே வளர்ந்துவிட்டது. உண்மையில் இப்படி ஆசிரியப்பாங்கு கொண்டதல்ல.

வழக்குக் காரணமாக அப்படிச் சொல்கிறோம். உண்மையில் Edit பண்ணுவதென்பது செவ்விதாக்கல், செவ்வைப்படுத்தல் என்ற கருத்தையே உடையது. நாளிதழின் கடமை- செய்திகளை அவற்றின் பின்புலத்தில் செவ்விதாக வழங்குதலே. நீங்கள் இந்தப் பணியை உள்ளூர உணர்ந்து கொண்டுள்ளவர்கள் என்பது தெரிகிறது.

தங்களின் வளர்ச்சியில் ஈழத்து செய்தி இதழ் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் சேர்த்துக்கொள்ளப்படட்டும்.

## மென்பந்துச் சுற்றுப் போட்டி

சஞ்சீவன் ஞாபகார்த்த மென்பந்து சுற்றுப் போட்டியில் இன்று யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் . ஆட்டத்தில் - காலை 8.30 மணிக்கு, யாழ். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியை எதிர்த்து யா.கனகரட்ணம் ம.ம.வித்தியாலயமும், காலை 10.30 மணிக்கு யாழ்.கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியை எதிர்த்து கந்தரோடை விக்னேஸ் வராக் கல்லூரியை எதிர்த்து கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியும், பிற்பகல் 12.30 மணிக்கு நெல்லியடி ம.ம. வித் தியாலயத்தை எதிர்த்து புனித ஜோசப் மகா வித்தியாலயமும், 2 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரியும் மோதவுள்ளன.

# ஈராக்கில் பேரழிவு ஆயுதங்களைத் தேடுவதாயின் 600 மில்லியன் டொலர் அமெரிக்காவுக்கு தேவை!

ஈராக்கில் பேரழிவைத்தரக்கூடிய ஆயுதங்களை தேடிக் கண்டு பிடிப்பதற்கு, 600 மில்லியன் டொலர்கள் வரை தேவைப்படுமென, அமெரிக்க அரசு தெரிவித்துள்ளதாக நியூயோக் ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது. இதனிடையே ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளின் உள்நாட்டு தேவைகளுக்கு 87 மில்லியன் டொலர்களை ஒதுக்கீடு செய்யுமாறும் வெள்ளை மாளிகையில் கேட்கப்பட்டிருந்தது.

இதுவரை ஈராக்கில் பேரழிவைத் தரக்கூடிய ஆயுதங்கள் எவையும் கண்டுபிடிக்கப்படாத நிலையில், மிகக்கூடிய நிதி ஒதுக்கப்பட்டதன் மூலம், தேடுதல்களைத் தீவிரப்படுத்த அமெரிக்க அரசு திட்டமிட்டுள்ளதாக ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்தது.

இந்த நிதி கிடைத்தால் ஈராக்கில் உள்ள அமெரிக்க அதிகாரிகளின் எண்ணிக்கையை 1200 இல் இருந்து 1400 ஆக உயர்த்த முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டதாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

## உலக நோக்கு

# அல்-கொய்டா தீவிரவாதிகளைத் தேடி பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் வேட்டை

ஆப்கானிஸ்தான் எல்லைப் பிரதேசங்களுடன் அமைந்த பாகிஸ்தான் பகுதியில், அல் - கொய்டா தீவிரவாதிகளை தேடும் பணியில் பாகிஸ்தான் படையினர் ஈடுபட்டுள்ளனர். பாகிஸ்தான் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள வஷிறிஸ்ரான் எனும் இடத்தில், அல் - கொய்டா தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக படையினர் தெரிவித்தனர்.

அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சரின் வருகையையொட்டியே இந்தத் தேடுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவரின் விஜயம் பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஒரு வருடத்தில் நூற்றுக்கணக்கான பாகிஸதான் படையினர் ஒன்றிணைந்து நடத்திய தேடுதல் இதுவெனத் தெரிவிக்கப்பட்டது.

அல் - கொய்டா இயக்கத்தின் தலைவர் ஒசாமா பின்லேடனும், அவரது உதவித் தலைவர் அமான் அல் சவாரியும் மிகவும் பின்தங்கிய இந்தப் பிரதேசத்தில் ஒழிந்திருப்பதாகத் தெரிவிகப்படுகிறது. இதேநேரத்தில் பாகிஸ்தானுக்கு வருகைதரவிருந்த அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர், பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பிடம் - கூடுதலான இராணுவ அழுத்தங்களை தலிபான் மீது பிரயோகிக்குமாறு கேட்கவிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆப்கானிஸ்தான் போதிய ஒத்துழைப்பை தரவில்லையென பாகிஸ்தான் தெரிவித்திருந்தது.

# பாலிக்குண்டு வெடிப்பு சந்தேக நபருக்கு உறுதியாகியுள்ள மரணதண்டனைத் தீர்ப்பு!

இந்தோனேசியாவில் 202 மக்களைப் பலிகொண்ட பாலிக் குண்டுவெடிப்பின் முக்கிய சந்தேக நபர்களில் ஒருவரான முகலாஷ்ஷுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. இவருக்கெதிரான குற்றங்கள் உயர் நீதிமன்றத்தால் நிரூபிக்கப்பட்டிருந்ததால், துப்பாக்கி அணியினால் சுட்டுக்கொல்லுமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

43 வயதுடைய இஸ்லாமிய மத ஆசிரியரான முகலாஷ், பாலிக் குண்டுத் தாக்குதல் தொடர்பான கூட்டங்களில் பங்கு கொண்டிருந்ததாகவும், அதற்கான நிதியைச் சேகரித்ததாகவும் குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தார்.

தாக்குதலில் தனக்கு நேரடியான தொடர்புகள் இல்லை என்றும், குண்டுதாரிக்கு மத அறிவுறுத்தல்களை மாத்திரமே தான வழங்கியதாகவும் முகலாஷ் தெரிவித்தார்.



இதே நேரத்தில் குண்டுத் தாக்குதல் நடைபெற்ற தினத்தில், பாலியில் தான் இருக்கவில்லையெனவும் வாதிட்டார். இந்தக் குண்டுவெடிப்பில் வேறு மூவரும் முக்கிய சந்தேக நபர்களாக அறிவிக்கப்பட்டிருந்தார்கள். முகலாஷ்ஷின் சகோதரர் அம்ரோஷிக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தககது.

# அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டவர்களை உடன் வெளியேற்றுவதற்கு திட்டம் வகுப்பு!



பிரித்தானியாவில் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டவர்களை வெளியேற்றுவதற்கான திட்டங்களை துரிதப்படுத்துமாறு உள்நாட்டு அமைச்சர் டேவிட் பிளாங்கெற் கேட்டுள்ளார். இதன் மூலம் பிரித்தானிய அரசாங்கத்தில் கொடூரமானவர்கள் ஆட்சி செய்கின்றார்கள் என்று அர்த்தம் கொள்ளக் கூடாதெனவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் பொர்னெமவுத்தில் நடைபெற்ற தொழில் கட்சியின் மகாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே அகதி அந்தஸ்து கோருபவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குவது தொடர்பாக, மாறுபட்ட கருத்துக்கள் இருப்பதாகவும் டேவிட் பிளாங்கெற் தெரிவித்தார்.

உண்மையான அகதிகளையும், பிரித்தானியாவின் தொழிலாளர் பற்றாக்குறையான துறைகளில் தொழில் புரிய தயாரானவர்களையும் தமது நாடு ஏற்றுக்கொள்ள தயாராக உள்ளதாகவும் உள்நாட்டமைச்சர் தெரிவித்தார்.

# அணுவாயுதம் வைத்திருப்பதாக சதாம் ஏமாற்றியுள்ளாராம்!

ஈராக்கில் பேரழிவைத் தரக்கூடிய ஆயுதங்கள் தனது படைத் தலைவர்களிடம் இருப்பதாக, தனது நாட்டின் மீது போர் தொடுக்க முயற்சித்தவர்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்த சதாம் முயற்சித்துள்ளார். இவ்வாறு ஈராக்கில் ஆயுதங்கள் தேடுவதற்கு பொறுப்பாக இருந்த 'டேவிட் கோ' தெரிவித்தார்.

அமெரிக்க காங்கிரஸிடம் இது தொடர்பாக தெரிவிக்கவுள்ளதாக 'கே' தெரிவித்ததாக, 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை தெரிவித்தது.

இதுவரை எதுவிதமான பயங்கர ஆய்துங்களும் கண்டுபிடிக்கப்படவில்லை என்ற கருத்தையும் தெரிவிப்பார் எனவும் கருதப்படுகிறது.

அண்மைக் காலத்தின், அமெரிக்க, பிரித்தானிய மக்களிடையே பொய்யாக கருத்துக்களை வெளியிட்டு ஈராக்கின் மீது போர் தொடுக்கப்பட்டதாக அந்த நாட்டு அரசுகளை இவர் கடுமையாக விமர்சித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பெருமளவு புளுட்டோனியம் சேகரித்ததன் மூலம் வட கொரியா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது!

ஆறு அணுகுண்டுகளைத் தயாரிப்பதற்கு ஏற்ற புளுட்டோனியத்தை இதுவரை தாம் சேகரித்துள்ளதாக, வடகொரியா தெரிவித்துள்ளது. மேலும் தமது அணுசக்தி வலுவை அதிகரிக்க உள்ளதாகவும் தெரிவித்தது.

அமெரிக்காவின் அணுவாயுத அச்சுறுத்தல்கள் தொடர்வதால், தாம் வேறு வழிகளின்றி தமது அணு ஆயுத பலத்தையும் அதிகரிக்க வேண்டியுள்ளது. அத்துடன் 1994 ஆம் ஆண்டு அமெரிக்காவுடன் ஏற்பட்ட ஒப்பந் தத்தின் பின்னர் வட கொரியாவில் யோங்பையோனில் அமைக்கப்பட்டிருந்த அணு ஆலை தமது செயற்பாடுகளை நிறுத்தியிருந்தது. ஆனால், அண்மையில் மீண்டும் ஆரம்பித்துள்ளது.



வட கொரியாவின் வெளிவிவகார அமைச்சர் சோய் சூ - கான், நியூயோர்க்கிலுள்ள செய்தி சேவை ஒன்றிற்கு மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். இந்த முறை வெளிப்படையாகவே தனது ஆயுத திட்டங்களை வடகொரியா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.


## சிறு விளம்பரம்

**சித்திரக் கலை O/L, A/L**

வார நாட்களில் சித்திரபாட துரித மீட்டல் வகுப்புக்கள் நடைபெறுகிறது. நேரம் 3.30-5.30. இவற்றுடன் பெண் அலங்காரம், கேக்ஜசிங், உடை அலங்காரம் என்பவற்றுக்கான ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அருண் கலைக்கூடம்,தேவாலய வீதி, சண்டிலிப்பாய். குககிருபை (மானிப்பாய் மகளிர் கல்லூரி அருகில்) யாழ் வீதி, மானிப்பாய். (497)

நிறஞ்சனாஸ் சங்கானை

விஜய்,ரம்பா, குஷ்பு நடித்த

மின்சாரக் கண்ணா

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.) (சி-1618)

STRATEGIC COMMAND

ராஜா யாழ்ப்பாணம்.

இன்று முதல்

பிரசாந், கிரண் நடித்த

வின்னர்

காட்சி நேரம்:

10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே) (சி-1619)





யாழ்ப்பாணத்துக்கு திரும்பிவந்த, இடம் பெயர்ந்து சென்றவர்கள் இப்பொழுது படாத பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இனி மழைக்காலமும் தொடங்கிவிட்டால், அவர்களின் நிலைபற்றிச் சொல்லத் தேவையில்லை.

தென்னிலங்கையிலுள்ள அரசியல்வாதிகள் நாட்டின் பாதுகாப்பைப் பற்றித்தான் கூச்சலிடுகிறார்கள். அங்கேயுள்ள ஊடகங்கள் சிலவும் கூடப் புலிகள் பற்றி, சிங்கள மக்களுக்கு கலியை ஏற்படுத்துவதாலும் நாடு துண்டாடப்படுவதைத் தடுக்க அரசியல் தலைவர்கள் ஒன்றுபட வேண்டும் என்றும் பிரசாரம் செய்து வருகின்றன.

புலிகள் ஆயுதங்களை இறக்குமதி செய்கிறார்கள், சிறுவர்களைப் படைக்குச் சேர்க்கிறார்கள், ஆட்களைக் கடத்திச்சென்று, பெருந்தொகைப் பணத்தைக் கப்பமாகக் கேட்கின்றார்கள் என்று ஆங்கிலத் தினசரிகள் சில, தினமும் செய்திகள் வெளியிடுகின்றன. ஆங்கிலப் பத்திரிகைகளே இப்படிச் செய்திகளை வெளியிட்டால், சிங்கள இதழ்கள் எப்படி வெளியிடுமென்று சொல்லத் தேவையில்லை.

தெற்கில் மழை விழுந்து வெள்ளம் ஏற்பட்டால் அங்கு மக்கள் படும் அவலங்களைப் புகைப் படங்களாகவும், செய்திகளாகவும் பக்கம் பக்கமாக வெளியிடும் கொழும்புப் பத்திரிகைகள் வடக்கிலும் - கிழக்கிலும் படையினர் ஆக்கரமித்துள்ளதால் தங்கள் வீடுகளில் சென்று வாழ முடியாமல் அல்லற்படும் மக்களின் அவலங்களை ஏன் வெளியிட முன்வருவதில்லை?

போர் காரணமாகத் தங்கள் இருப்பிடங்களைவிட்டு வெளியேறிச் சென்ற சில குடும்பங்கள் போர் நிறுத்தத்தின் பின் தங்கள் பிறந்த மண்ணுக்குத் திரும்பி வந்தன. தங்கள் இடங்களுக்குப் போக முடியாமல் படைகள் தடையாக இருக்கின்றன. இதனால், இந்தக் குடும்பங்கள் சில யாழ்ப்பாண நகரில் காலியாகக் கிடந்த முஸ்லிம் குடியிருப்புக்களில் போய்த் தங்கியிருந்தன. இப்பொழுது இடம்பெயர்ந்து சென்ற முஸ்லிம்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் திரும்பி வந்து கொண்டிருக்கின்றனர். இவர்கள் தங்கள் வீடுகளில் மீளக்குடியேறுவதால், இந்த வீடுகளில் வந்து ஒண்டிக்கொண்டிருந்த குடும்பங்கள் வெளியேறவேண்டி ஏற்பட்டது. இவர்களில் பலர் இப்பொழுது பொம்மை வெளியில் குப்பைகள் கொட்டப்படும் இடத்தில் சிறுசிறு கொட்டில்களையும் போட்டுத் தங்கியிருக்கின்றனர். சிறு பிள்ளைகளுடனும், குழந்தைகளுடனும் இவர்கள் படும் அவலம் சொல்லமுடியாது. இனி மழை காலம் வந்தால் இவர்கள் என்ன பாடுபடப் போகிறார்களோ என்று கவலையுடன் தெரிவித்தார் ஒரு நண்பர். இவர் பெரும்பாலும் தினமும் பொம்மை வெளியைத் தாண்டித் தமது ஊருக்குச் சைக்கிளில் சென்று வருபவர்.

இப்படி யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, வடக்கு கிழக்கில் அவதிப்படும் மக்கள் பல பகுதிகளில் உள்ளனர்.

சிறுவர்களைப் படைக்குத் திரட்டுகிறார்கள் என்று கண்ணீர் வடித்த கதிர்காமருக்கும் இன்றும் கண்ணீர் வரும். தென்னிலங்கை அரசியல் வாதிகளும் ஊடகங்களும் இப்பகுதிகளுக்கு நேரில் சென்று சிறுவர்களும், குழந்தைகளும் படும் துன்பங்களைப் பார்க்க வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னர் இருந்த வீதிகளே சில இடங்களில் படையினரின் காவல் அரண்களினால் ஒடுங்கியிருக்கின்றன மற்றும் பல இடங்களில் குடியிருப்பாளர்களினாலும் வீதிகள் ஒடுங்கியிருக்கின்றன. ஆனால் வாகனங்களோ அதிகரித்து வருகின்றன. வீதிகள் பலவும் பள்ளமும் மேடுமாக இருப்பதுடன், சிறுகற்கள் பாதணியில்லாமல் செல்லும் மக்களின் பாதங்கள்ளையும் பதம் பார்க்கின்றன. குப்பை கூழங்கள் வேறு இவற்றுக்கு ஒதுங்கிச் சென்றால் எந்தச் சமயமும் விபத்தேற்படலாம்.

வீதிகள் விஸ்தரித்து அகட்டப்படல் வேண்டும். போக்குவரத்து நெருக்கடியை நீக்க புதிய வீதிகளும் யாழ்.நகரில் திறக்கப்பட வேண்டும் என்பது எனது நண்பர் சொல்லிக் கொண்டிருந்தார். இதில் குறுக்கிட்ட மற்றொரு நண்பர் சொன்னார்.

விமானத்திலிருந்து குண்டு போட்டு யாழ்ப்பாண நகரில் பல இடங்களை அழித்தவர்கள் முழு நகரத்திலுள்ள கட்டடங்களையும் அழித்துத் தொலைத்திருந்தால் ஜேர்மனியைப் போல புதிய நகரத்தையுமே உருவாக்கியிருக்கலாம் என்றார்.

அப்படிச் செய்திருக்கலாம் தான் என்றாலும், எல்லை தெரியாவிட்டாலும் யாழ்ப்பாணத்தான் எல்லை வழக்குப் போடாமலிருப்பானா? என்றார் மற்றவர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

உயர் பாதுகாப்பு வலயம் எனப் பெயரிட்டு இராணுவம் ஆக்கிரமித்து, குடியேறி அதிகாரம் செய்துவரும் பிரதேசத்திற்கு அண்மித்த தத்தம் சொந்தக் காணிகளில் - கல்வீடுகள் கட்டிக்கொண்டு மக்கள் குடியிருக்கப் படையினர் தடைவிதித்துள்ளனர். அத்துடன், ஏற்கனவே கட்டிய ஒரு கல்வீட்டையும் இடித்தழிக்குமாறும் உத்தரவிட்டுள்ளனர்.

மீளக்குடியமர்ந்தவர்கள் - ஓலைக் குடிசைகளை மட்டுமே அமைக்கலாமாம். இது வளளாய் பகுதியில் நிகழ்ந்துள்ள சம்பவமாகும்.

புனர்வாழ்வு, புனரமைப்பு என்று பேசிக்கொண்டு, அதற்கென தனியான அமைச்சையும் உருவாக்கி, உலகமெல்லாம் கையேந்தி அதற்கான பெருமளவில் நிதியையும் திரட்டிவரும் அரசு - இடம்பெயர்ந்தோர் தத்தம் சொந்த இடங்களில் மீளக்குடியேறி, புனர்வாழ்வை ஆரம்பிக்க, புனரமைப்பு நிர்மாணப் பணிகளை மக்கள் மேற்கொள்ள தடைவிதிக்கும் படையினரின் செயல்களுக்கு தடைவிதிக்க முன்வருவதாக இல்லை.

மக்களின் வாழ்வியல் உரிமைகளை நிராகரிக்கும் படையினருக்கும், மௌன அங்கீகாரம் வழங்கும் அரசுடன் சமாதான பேசுதல் சாத்தியமாகுமா?

யார் சொன்னது புனர்வாழ்வு, புனரமைப்பு எல்லாம் வடக்குக் கிழக்கு மக்களுக்கென்று... அது சரிந்துபோன சிறிலங்காவின் பொருளாதாரத்திற்கு புனர்வாழ்வளிக்கவும்,' சிங்கள பகுதிகளை புனரமைப்பு செய்வதற்கும்தான் என்கிறார், உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் காணியை உடைய ஒரு அப்பாவிக் குடிமகன்.

-தெருவாசி

# புலிகளையும், மக்களையும், ஒருபோதும் எவரும் எளிதில் ஏமாற்றிவிட முடியாது!

## கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு

எமது மக்களையும், விடுதலைப் புலிகளையும் எவரும் எளிதில் ஏமாற்றிவிட முடியாது.

இவ்வாறு திகாமடுல்ல மாவட்ட தமிழ்த்தேசிய நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு, நேற்று கல்முனை ஸ்ரீ மாமாங்க வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

'விடுதலைப் புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகம் வழங்கப்படாது போனால், மீண்டும் பாரிய யுத்தம் ஆரம்பமாவதைத் தவிர்க்க முடியாது. அவ்வாறு யுத்தம் தொடங்கினால், அடுத்த முடிவு தமிழீழம் தான் என்பதில் விடுதலைப் புலிகள் உறுதியாகவுள்ளனர்.

'யுத்தம் முடியவில்லை, இடைநிறுத்தப்பட்டுள்ளது. அதேபோல் சமாதானப் பேச்சுவார்த்தையும் முடிவுறவில்லை, அதுவும் இடைநிறுத்தப்பட்டேயுள்ளது.

எனவே - யுத்தம் இந்நாட்டில் மீண்டும் ஆரம்பிக்கலாம் அல்லது நல்ல நிலைமை ஒன்றும் தோன்றலாம்.

ஆகவே, எத்தகைய நிலை தோன்றினும் - தமிழ்மக்கள் அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட ஒன்று திரளவேண்டும்.

அமைச்சர் மிலிந்த மொறகொட அமெரிக்காவையும், இந்தியாவையும் இந்த நாட்டுக்குள் ஏன் கொண்டு வந்துள்ளாரென்பதை நாம் புரியாமலில்லை. யுத்தம் ஒன்று மீண்டும் ஆரம்பமாகுமானால், அதற்கான உதவிகளையும் பெறவேண்டும் என்பதற்காகவே இந்த சூட்சுமம் கையாளப்பட்டுள்ளது.

இதை நாம் அறியாதவர்களல்ல, எம்மை இனிஒருபோதும் ஏமாற்றிவிட முடியாது. உலகில் இன்று சமாதானத்துக்கு எதிராகப் பேரணி ஒன்று நடந்துள்ளதென்றால் - அது ஜே.வி.பி.யினர் நடத்தும் பேரணி ஒன்றே தான்.

ஜே.வி.பி.யினரின் கம்யூனிஸ சித்தாந்தம் இன்று உலகில் விரட்டியடிக்கப்பட்ட ஒன்றாகும்.

அவர்கள் இங்கு ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமென்ற நப்பாசையில் தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தாம் ஆட்சிக்கு வந்தால் நிரந்தர சமாதானத்தைத் தோற்றுவிப்பேன் எனக் கூறிக்கொண்டு வந்த ஜனாதிபதி சந்திரிகா, இன்று சமாதானத்திற்குத் தீவைத்துக் கொழுத்திக் கொண்டிருக்கிறார்.

இதனால்தான் இன்று சமாதானத்துக்கு எதிரான ஜே.வி.பி.யினரின் பாதயாத்திரையில் - பொதுஜன ஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் பங்குகொண்டு வருகின்றனர்.

தமது கொள்கைக்கு எதிராக, இன்று சிங்கக் கொடிகளை ஏந்திக் கொண்டு பாதயாத்திரை செல்லும் ஜே.வி.பி.யினர் யாழ்ப்பாணத்திற்கோ, மட்டக்களப்பிற்கோ நேரில் வந்து உண்மை நிலைமைகளைப் பார்த்து உணர்ந்தவர்களல்லர்.

இவர்கள் நாளை தம் சுயநல அரசியலுக்காக சிங்கக்கொடியை விட்டு, வேறு என்ன கொடிகளைத் தூக்குவார்களோ தெரியாது என அவர் மேலும் தெரிவித்தார்.





அயர்லாந்து செல்லப் புறப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் குழுவினரை முதற்படத்திலும், அவர்கள் ஹெலியில் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# தமிழக அரசு ஒத்துழைப்பு வழங்கினால் கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவை

## இந்திய கப்பல் போக்குவரத்து அமைச்சர்

(புதுடெல்கி)

தமிழக அரசின் ஒத்துழைப்புக் கிடைக்குமாயின் - தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை விரைவில் ஆரம்பிக்கமுடியும் என்று, இந்திய மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சர் சத்துருக்கன் சிங்கா தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி துறைமுகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கப்பல் சேவையை ஆரம்பிப்பதில் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்குத் தமிழக அரசின் ஒத்துழைப்பு தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கப்பல்சேவையை ஆரம்பிப்பதற்கான உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துவதற்கு இந்திய அரசு தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ரயில்வே ஊழியர்களின்

# வேலைநிறுத்தப் போராட்டம் நேற்று நள்ளிரவுடன் முடிவு!

(கொழும்பு)

ரயில்வே ஊழியர்கள் மேற்கொண்ட அடையாள வேலைநிறுத்தம் நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்தது.

ரயில்வே தொழிற்சங்கக் கூட்டமைப்பு, ரயில்வே துறைசார் ஐக்கிய தொழிற்சங்க முன்னணி என்பன நேற்றுப் பகல் நடத்திய கலந்துரையாடலில் இது தொடர்பாக முடிவு எடுக்கப்பட்டதாக, அதன் இணை அமைப்பாளர் தெரிவித்தார்.

தற்போது வேலைநிறுத்தம் முடிவடைந்திருப்பதால் அனைத்து ஊழியர்களும் கடமைக்குத் திரும்பவேண்டுமென, மேற்படி அமைப்புக்கள் தமது அங்கத்தவர்களைக் கேட்டுள்ளது. (01)

## செஞ்சிலுவை சங்கத்துடன் தொடர்புகொள்ளக் கோரிக்கை

கீழ்க் குறிப்பிட்ட பெயர் விபரங்களை உடைய நபர்களை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் இல.120 கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

நடராஜா புவனேஸ்வரி (மாதகல்துறை, மாதகல்), தவராஜசிங்கம் சுகிர்தாதேவி (விபுலானந்த வீதி, வாழைச்சேனை), ஷைலா சேனாதிராஜா (றோயல் ரெஸ்ட் லொட்ஜ் கொழும்பு, யாழ்ப்பாணம்), ரவீந்திரராஜா தவமணிதேவி (வட்டுவாகல் பாலம், முல்லைத்தீவு) பழனியாண்டி பாலேஸ்வரன் (வல்வெட்டித்துறை) சந்திரன் செல்வராணி (ஊரெழு, சுன்னாகம்) அன்ரனி தேவமலர் (திருக்குடும்பமாதா கோவிலடி, சுன்னாகம்.)

## விபத்தில் சிக்கியவர் மரணம்

கடந்த மாதம் ஆறுகால்மடம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனளிக்காது நேற்று மரணமானார்.

இந்தச் சம்பவத்தில் பொ.சாம்பசிவம் (வயது 68) என்பவரே மரணமானவராவார்.

இவரை மோதிய ஆட்டோ தப்பிச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணைகளை அடுத்து சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (111)

# சுசந்திகா பயணம் செய்த கார் மீது இராணுவ ட்ரக் வண்டி மோதியது!

பத்திரமுல்ல வீதியில் சுசந்திக்காவும் அவரது கணவரும் வீதியால் சென்றுகொண்டிருந்தவேளை இராணுவ வாகனம் ஒன்றுடன் மோதியது. இதனால் சுந்திக்காவின் கார் சேதத்துக்குள்ளானது.

இதனால் ஆத்திரமடைந்த சுசந்திகாவின் கணவர் காரிலிருந்து இறங்கிவந்து இராணுவ வாகனத்தை ஓட்டிவந்த சாரதியை தாக்கியுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக சாரதி பத்திரமுல்ல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (01)

## கட்சி....

வித்துள்ளார்.

பேச்சுக்கள் தொடங்கும் வாய்ப்புப் பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவுக்கு மைத்திரிபால சிறிசேனவே தலைமை வகிக்கின்றார்.

எவ்வாறாயினும், கட்சியின் தலைவர் என்ற வகையில் பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்க வேண்டுமா என ஜனாதிபதியே தீர்மானிப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## வெள்ளப்....

கிராமத்தில் வெள்ளப்பெருக்கினால் 8 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

ஐந்து மாதத்துக்கு முன்னர் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, மண்சரிவினால் தென்ப குதியில் 250ற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டதும் தெரிந்ததே.

## திருமலையில்....

தப்பியவர். இச்சம்பவம் தொடர்பாக, பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் இணைந்து, வீடு வீடாகச் சென்று சோதனைகளை மேற்கொண்டதுடன், பொதுமக்களுடைய அடையாள அட்டைகளையும் பார்வையிட்டு வருவதுடன், உடற்சோதனைகளுக்கு உட்படுத்தி வருகின்றனர். இவருடைய உடல் மரண விசாரணைக்காக திருகோணமலை அரசினர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (04,10)

# எதிர்க்கட்சிகள் பாரிய...

ஜனாதிபதி சந்திரிகாவின் முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு என்பது சிறிலங்காவிலுள்ள அனைத்துப் பிரதான எதிர்க்கட்சிகளாலும் முன்வைக்கப்பட்ட ஒன்றெனவும் இது குறித்து அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பேச்சு ஆரம்பமாகும்போது, முழுமையாக விவாதிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, அண்மையில் நியூயோர்க்கில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி பாஜ்பாய்க்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பு மிக வெற்றிகரமாக நடைபெற்றது. இலங்கையின் நிலவரம் குறித்து இந்தியா மிகவும் தெளிவாக புரிந்துணர்வு கொண்டிருப்பதோடு சமாதான முயற்சிகளுக்கு பெருமளவு ஆதரவை வழங்கிவருவதாகவும் - அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

## இறுதி...

புறப்பட்டுச்சென்றுள்ள இந்தக்குழுவில் அரசியல்த்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கேணல் கருணா அம்மான், மகளிர் துணைப் பொறுப்பாளர் தமிழ்விழி, மற்றும் ஜோர்ஜ் ஆகியோர் சென்றுள்ளனர். கொழும்பில் தங்கியிருக்கும் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ச.புலித்தேவன், செல்வி, தொல்காப்பியன் ஆகியோர் இவர்களுடன் இணைந்து கொள்ளவுள்ளனர்.

# யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த மகளிர் சங்கம நிகழ்வு

யாழ். மாவட்ட அரசியற்துறை மகளிர் அமைப்பினரால் ஒழுங்குபடுத்தப்பட்ட யாழ். மாவட்ட மகளிர் அமைப்புகளின் சங்கமம் நிகழ்வு நேற்றுக் காலை 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

கூட்டுறவு சேவையிலுள்ள திருமதி வேதவல்லி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன், வண. பிதா டேமியன் அடிகளார் ஆகியோர் பொதுச்சுடரினை ஏற்றினர்.

தேசியக் கொடியினை யாழ். மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் கலைவழி ஏற்றினார். 2 ஆம் லெப். மாலதியின் திருவுருவப்படத்திற்கு மாவீரர் காவியனின் தாயார் ஈகச்சுடரேற்றி, மலர்மாலை அணிவித்தார்.

இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் உட்பட துறை சார்ந்த அறிஞர்கள் சிறப்புரையாற்றினர்.

## இலங்கையின்....

வெள்ளை மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடியதுடன், அமெரிக்க வர்த்தக மையத்தின் தலைவர் தோமஸ் டொன்கூ வர்த்தகக் கம்பனிகளின் தலைவர்கள் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பு அமைச்சருடனான அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஆர்.ரூபசிங்கவும் உடனிருந்தார்.

## யுனிசெப்....

இணைக்கப்படுவாரென யுனிசெப் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த இரண்டு ஆண்டுகளாக 300 இற்கும் அதிகமான சிறுவர்களை விடுதலைப் புலிகள் விடுவித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## பொது அறிவுப் போட்டி

யாழ். பல்கலைக்கழக விவசாய பீட மாணவர் ஒன்றியத்தினால் மறைந்த விவசாயபீட மாணவர்களான ஜெயக்குமார், கிருபாகர் ஆகியோர் நினைவாக பொதுஅறிவுப் போட்டி நாளை நடத்தப்படவுள்ளது.

நாளை காலை 10 மணிக்கு நடைபெறும் இந்தப் போட்டி - வடமராட்சி மாணவர்களுக்கு - கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியிலும், தென்மராட்சி, வலிகாமம் வடக்கு, மேற்கில் உள்ள பாடசாலை மாணவ்ர்களுக்கு - யாழ். விவசாய பீடத்திலும், கிளிநொச்சி மாணவர்களுக்கு- கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும் நடைபெறுமென விவசாயபீட மாணவர் ஒன்றியத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.